தென்மொழி

மக்களுடை எழுச்சியெலாம்
வன்முறையென் றடக்குவதால்
மக்களர சென்பதனின்
மதிப்பென் னாகும் ?

தக்க முறை நடவடிக்கை
எடுக்காமல், சட்டமுறை—
படைமுறையைப் பயன்படுத்தின்
தகைவென் னாகும் ?

பக்கவிளை வெண்ணாமல்
எதிர்விளைவும் பாராமல்,
பலவாறாய் ஒதுக்கிவிடப்
பதைப்ப தென்ன ?

ஒக்கநலம் பேணுகின்ற
முறையன்றோ ஒத்தமுறை !
உண்மையினை எண்ணிப்பார்த்
துணரு வீரே !

உண்மையினை உணருவீரே!



ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

சுவடி : 23
ஓலை : 8

விலை
உருபா: 1-75

நமக்கு வந்த மடல்கள்.

○ : *1232 :* அன்பிற்கினிய அய்யா ! வணக்கம். தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் — தொடர்ந்து படிக்கத் தொடங்கியுள்ளேன். முதன் முதலில் தங்களுடன் தொடர்பு கொள்வதில் உள்ளம் இறும்பூது எய்துகிறேன். தங்கள் படைப்புகள் அனைத்தையும் பெற்றுப் படித்துத் தெளிவுற விரும்புகிறேன்...... தங்களின் ஈகச் செயலால் தமிழினம் நலிவு நீங்கிப் பொலிவு பெறும் என்பது திண்ணம். திருக்குறள் மெய்ப்பொருளுரை வெளிவருவது எப்போது என்பதை அறிய ஆவலாய் உள்ளேன். தங்கள் அன்புத் தொண்டன், — வே. விசயகுமார், இரா. வெள்ளோடு (அஞ்)

○ : *1233 :* பெரு மதிப்பிற்குரிய பாவலரேறு அவர்கட்குத் தங்கள் மேலான அன்பிற்குக் கட்டுப்பட்ட தம்பி வில்வநாதனின் தலைதாழ்த்திய வணக்கம். தங்கள் ஆறுதல் மடல் கிடைத்தது. செய்தியறிந்தோம். தங்களின் அன்புளத்தைக் கண்டு மனமகிழ்ந்தோம். ஆறுதலுக்காக வரைந்த நும் மொழிகள் எம்மைக் கண்ணீர் சிந்தும்படிதாம் செய்தன. ஆறுதல் மொழிகள் பிள்ளையின் நினைவலையைப் புயலலையாய் மாற்றி விட்டது. எனினும் உம் பொன் மொழிக்குப் பணிகின்றோம்.

தங்கள் எழுத்துகள், எங்கள் கண்கள் சிந்துகின்ற கண்களுக்கு மதகுகளாயின ; தேம்பியழும் எங்கள் வாய்களை மூடுகின்ற அன்புக் கைகளாயின ; எங்கள் மேல் இறைவன் போட்ட சூட்டுக் கொப்புளத்திற்கு அரும் மருந்தாயின ; மகளின் சிந்தனையால் உறங்காதிருந்த எங்கள் விழிகட்கு உறக்க மாத்திரைகளாயின ; தளர்ந்து விட்ட எங்கள் கால்களுக்கு ஊன்றுகோல்களாயின ; வாடிய எங்கள் உடல் கொடிகட்கு உயிரூட்டவரும் மழைத்துளிகளாயின ; எங்கள் உடல் மெலிவைப் போக்கும் ஊட்டச்சாரம் ஆயின. எங்கள் கண்ணீர் வெள்ளம் வெளிவராமல் தடுக்கும் காவல்களாயின ! அன்புடன்,— வீ. வில்வநாதன், பெங்களூர்-16

○ : *1234 :* அன்பு நிறைந்த ஐயா, அவர்களுக்கு, தங்கள் அன்பின் மலரடியினைத் தொட்டு வணங்கி எழுதிக்கொண்டது: தென்மொழி, தமிழ்ச்சிட்டு இரண்டு இதழ்களிலும் வரும் பாடல்களும், அறிவுக் கருத்துகளும் தங்கள் தூய உள்ளத்தில் எண்ணி எண்ணி வந்தவை என்று உணருவேன் ! செந்தாழை எழுதிய கட்டுரை மிகவும் சிறப்பாக இருந்தது. நேருவின் கடிதங்கள் என்ற நூலைப் படித்து இருக்கின்றேன். அப்படி எனக்குப் பெருமையாக இருந்தது, படித்து மகிழ்ந்தேன். . ஐயா எழுதிய குட்டிப் பயல் செந்தாழை மகன் பற்றி எழுதிய பாடலையும் படித்து உணர்ந்தும் பலரிடம் காண்பித்துப் படிக்கச் சொல்லக் கேட்டும் மகிழ்வேன். ஒவ்வொரு வரியும் சருக்கரை உடம்பைச் சாறுகப் பிழிந்த தேன் ! 'துன்பம் உறவரினும்' .. என்பது குறள். அவ்வளவு தொல்லை ஐயாவுக்கு ! தமிழ்ச் சிட்டு, தென்மொழிப் பாடல்களையும் மனப்பாடம் செய்து பாடிக் காட்டி வருகிறேன். எப்படியோ நடக்கட்டும். 'நிலையில் திரியாது'...... என்னும் குறளை நினைப்பேன். என்னால் எழுதமுடியவில்லை. எனக்கே இப்படி ; தங்களுக்கு எப்படியோ ! தங்கள், — திருக்குறள் பெருமாள், கன்னிக்கோயில்.

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை,-முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்
ஆசிரியர்:மா.பூங்குன்றன்.க.மு.
புரப்பாளர்கள்: தென்மொழி முல்லைவாணன், தென்மொழி ந. முத்துக்குமரனார், தென்மொழி ப. துரையரசன், தென்மொழி நா. இளமாறன், தென்மொழி பழநி-மகிழ்நன், தென்மொழி எசு.ஆர். பிரான்சிசு, தென்மொழி கா.இளமுருகன், தென்மொழி த. தானியேல் செபராசு, தென்மொழி அரசத் தொகையன், பாவலர். சா. சி. சுப்பையா, பாவலர். அ. பு. திருமாலனார், தென்மொழி த. அரிமா வளங்கோ; பொன். பாலகிருட்டிணன்; தென்மொழி இரா. பாலகங்காதரன் (தொலைபேசி : 847829)

சுவடி 23] உ௦கள மடங்கல் (ஆக-செப்.'87) [ஓலை 8

இனம், நிலம் மீட்க இணைந்து செய்க!

அட! அட! தமிழனே! நீ
ஆர்க்கிறாய்; வேர்க்கிறாய்; பின்
ஆரேனும் சவண்டன் வந்தே
அடக்கினும் அடங்கிக் கொள்வாய்!

கெடக்கெடச் சுவையும் கண்டாய்!
கீழ்மை, உள் ளரிப்பும் கொண்டாய்!
கேடுகள் உணர்வாய்; ஆனால்,
கெடுகிறாய்; கெ டுகின் றாயே!

சுடச் சுட ஒளிரும் என்று
சொல்வார்கள் பொன்னை ! நீயோ
சுட்டதும் கரியாய்ப் போவாய் !
சுருண்டிடும் அட்டை யாவாய் !
'படப்பட அறிவு வீறும்'—
பட்டறி வுரை, ஈதென்பார் !
பயனிலை உன்னி டத்தில் !
படப்படப் பட்டே போனாய் ! —1

இலங்கையில் எழுச்சி கண்டே
இங்குள்ள தமிழர் எல்லாம்
இதோ, நம் இனத்திற் கென்றே
எழுந்ததோர் ஆட்சி என்றார் !
துலங்கிடும் தமிழர் வாழ்க்கை
தோன்றிடும் உரிமை என்றார் !
தோன்றிய எழுச்சி நீண்டு
தொடர்ந்தது ! தொடர்ந்த தந்தோ !
கலங்கினர், உடல்,உள் ளங்கள் !
கதறினர் ; கருகிச் செத்தார் !
கணக்கிலாத் தமிழர் கூட்டம்
கரைந்தது கரைந்த தந்தோ !
நலங்கிளர்ந் தெழும்என் றே,நாம்
நாட்குநாள் காத்தி ருந்தோம் !
நண்ணிய திறுதி நாளும் !
நரித்தனம் வென்ற தைய்யா ! —2

ஓநாயும் நரியும் கூடி
ஒப்பந்தம் பேசித் தீர்க்க,
ஓங்கிய கோபு ரம்போல்
ஒடிந்தன கனவெல் லாமும் !
பீநாசி மணந்த துண்டோ ?
பேய்ச்செய வர்த்த னாவும்
பிழையான இராசீ வும்'—தாம்
பேசிய தாரே கண்டார் ?
பூநாறும் கூடைக் குள்ளே
புலவுநா றியதைப் போல
புலிவீரம் மாறிப் போன
புதுக்கதை கேட்டோம், அம்மா !

பாநூறு பாடி வெற்றி
பராவிடக் காத்த உள்ளம்
பதைத்தது ; கொதித்த தந்தோ !
பழுத்ததோ அடிமைக் காய்தான் ! —3

நெடுமரம் ஒன்றில் ஏறி
நெட்டுக்கே வீழ்ந்த தைப்போல்—
நெடுங்கடல் பயணம் செய்தே
நீருக்குள் மூழ்கி னாற்போல்—
கொடுவாளின் பிடிசெய் யப்போய்க்
குத்திட்டு மாண்ட தைப்போல்—
குரல்எழ மருந்து தின்று,
குடல்வெந்து செத்த தைப்போல்—
விடுதலை வேண்டிச் செய்த
வீரப்போர் முடிவில் மக்கள்
விடிவில்லா அடிமைப் பட்டு
வீழ்ந்ததை என்ன சொல்வோம் !
கெடுதலை ஊழ்தான் செய்த
கெடும்பென்றே எண்ண லாமா ?
கீழ்க்குணம் அழியா மக்கள்
என்றுமே அடிமை தானா ? —4

எந்தமிழ் இனமே ! இன்னும்
எத்தனை ஊழிக் காலம்—
எத்தனை ஆட்சி யோர்க்கே—
இருப்பாய், நீ அடிமை யாக?
சொந்தத்தைப் பகைக்கின் றாய், நீ !
சொந்தத்தை வெறுக்கின் றாய், நீ !
சொந்தத்தை இரண்ட கத்தால்—
சூழ்ச்சியால் அழிக்கின் றாய், நீ !
எந்தச்சூழ் நிலையி லும், நீ
எதிரியை நம்பு கின்றாய் !
எதிரிக்கே உழைக்கின் றாய், நீ !
எதிரியை வாழச் செய்வாய் !
செந்தமிழ் மொழியை நம்பு !
செந்தமிழ் இனத்தை நம்பு !
செந்தமிழ் நாட்டை மீட்க
ஒன்றுசேர் ! செயல் முழக்கு ! —5

போலித் தமிழர்களை உயர்த்துகிறதா தென்மொழி ?

பாராட்டுக்குரிய தென்மொழி ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்.

நமது 'தென்மொழி'— சுவடி. 23—ஓலை 7 -இல் ,செய்திகள்' பகுதியில் செய்தி என்னால் புரிந்து கொள்ள இயலவில்லை.

முசிறித் தமிழ்ச் சங்கம் தொடக்க நிகழ்ச்சி செய்தியை அழைப்பிதழ் வழியா ? அல்லது சுயசிந்தனை அடிப்படையில் செய்தியா ?

இல்லை தி. மு. கழகத்தவனை—இப்படி ஒரு அறுப்பு அறுத்தாலென்ன என்ற நிலையிலா ?

முசிறித்தமிழ்ச்சங்கத் தொடக்க விழா அழைப்பில் ,முனைவர். மீ. சு. இளமுருகு பொற்செல்வி' என்றுதான் அச்சிட்டிருந்தனர் என எண்ணுகிறேன்.

'தென்மொழி'— செய்திப் பகுதியில் சிறப்பு குறிப்பு இல்லாதது கூட பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் பெயர் 'வெட்டி குதறி' யதுதான் புரியவில்லை.

இதோ செய்தியில் உள்ளவாறு ''குளித்தலை பா. இளமுருகு. பொற்செல்வி.'' ஏன் ? இப்படிச் செய்தி தருவது 'தென்மொழி'— ஏட்டுக்கு ஏற்புடையதா ? அரிமா. பாவலரேறு தமிழினத்துக்குக் காரர்கள் 'உயர' படும் பாட்டை— இந்தச் செய்தி எப்படி தூளாக்குகிறது புரிகிறதா ?

அதே செய்தியில்—ஒருவரை 'தமிழ்த்திரு' என்று ஏற்றியிருப்பதில் மகிழ்கிறேன். ஆனால் இந்த எளியதொண்டனுக்கு—பெயருக்கு முன் கூட வெறும் 'திரு' கூட இல்லையே சரிதானா ? பெயர்-அமைப்பு பெயர்க்கப்பட்டது—மரியாதை திரு, அல்லது இறுதியில் 'அவர்கள்' எதுவுமே போடாதது ஏனென்று நான் கேட்கமாட்டேன்—வேப்பங்காய் கசக்கிறது என்று சலித்துக் கொள்ள நான் என்ன 'சர்வ முட்டாளா ?'

தமிழர்களை — தமிழை உயர்த்தும் 'தென்மொழி' உயர்த்துவதாகவே இருக்கிறது போலித் தமிழர்களை — மகிழ்கிறேன்.
நன்றி. அன்புடன்,   —மீ. சு. இளமுருகுபொற்செல்வி.

அன்பர்கள் கவனிக்க !

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில், மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக் கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேம்.

-அமைச்சர்.

இந்தியத் தேசிய இனங்களின் விடுதலை எழுச்சிகள்!

-தென்மொழி கரிகாலன்.

எனவே, சமயமும், இனமும் உடலும் உயிராக ஒன்றை ஒன்று பிரிக்க முடியாத அளவிற்கு இணைந்துவிட்டன. வெள்ளையர்கள் சமயத்தை உயிராக நேசிப்பவர்கள். ஆகையால், அவர்களின் ஆட்சிக்காலத்தில் சீக்கியர் சமயத்தில் தலையிடாமல் கவனமாக இருந்தனர். சீக்கியர்களோ, தமிழர்களைப்போல் அன்புக்குக் கட்டுப்பட்டவர்கள்; நேர்மையானவர்கள், சிறந்த உழைப்பாளர்கள்; அறிவும், ஆற்றலும், ஒழுக்கமும் வாழ்வில் கடைப் பிடிப்பவர்கள். அத்தகைய சீக்கிய இனத்தவர்கள் வெள்ளையர் காலத்திலேயே தனிநாடு கேட்டுப் போராடியவர்கள். இன்று பஞ்சாபும், பாக்கித்தானில் இணைக்கப்பட்டு விட்ட இராவல்பிண்டி, இலாகூர், போன்ற நகரங்கள் உள்ளடக்கிய பகுதிகளைக் கொண்ட அகண்ட பஞ்சாப் நாட்டைத் தங்களுக்கு அமைத்துத் தரவேண்டும் என்று வெள்ளையர்களிடம் கேட்டுப் போராடினார்கள், அன்றைய பஞ்சாப் சிங்கம் எனச் சீக்கியர்களால் போற்றப்பட்ட தலைவர் (Master) தாராசிங்கின் தலைமையில், ஆனால் பாக்கித்தான் முசுலீம் லீக் கட்சியின் தலைவர் சின்னாவும், இந்திய இந்துத் தலைவர்கள் காந்தியடிகள், பண்டிதர் நேரு, வல்லபாய் பட்டேல் போன்ற தலைவர்களும், மக்களின் விடுதலை உணர்வுகளை அழித்து விட்டார்கள். அந்நிய விடுதலை பெற்ற பின்னரும், தாராசிங்கின் விடுதலைக் கிளர்ச்சி ஓயவில்லை.

அவர்களின் உரிமைக் கிளர்ச்சியினை நசுக்க இந்திய அரசு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்தியாவின் உள்நாட்டு அமைச்சரும், உதவித் தலைமையமைச்சருமான வல்லபாய்பட்டேல் அவர்கள் உயர்காவல் துறை அதிகாரிகளுடன் கலந்து பேசி இரவோடு இரவாக தாராசிங்கைத் தளை செய்து நைனி சிறையில் அடைத்து விட்டார்கள்.

அவருக்குப் பின்னர், சீக்கியரின் கட்சிகள் பிளவுப்பட்டுப் பஞ்சாப் மாநிலத்தில் பேராயக் கட்சியே ஆட்சிக்கு வந்தது. எனினும், தாராசிங்கினால் ஊட்டப்பட்ட உணர்வு நாளொரு மேனியாக வளர்ந்து 1967-ஆம் ஆண்டு தேர்தலில் பேராயக் கட்சியை வீழ்த்தி விட்டு, குருநாம் சிங்கின் தலைமையில் அகாலி தளம், ஆட்சி அமைத்தது. அதிர்ச்சி அடைந்த அன்றைய தலைமையமைச்சர் இந்திராகாந்தி அகாலி இயக்கத்தைப் பிளக்க சூழ்ச்சி செய்தார். பிந்தரன்வாலேவின் உதவி கொண்டு இந்த முயற்சியைத் தொடங்கினர். முடிவில் பிந்தரன்வாலே இந்திரா அம்மையாருக்கு எதிராகவும், காலித்தானுக்கு ஆதரவாகவும் செயல்பட்டார்.

ஒரு தலைமுறை அமைதியுடன் இருந்த பஞ்சாப் மாநிலம் இன்று தீப்பற்றி எரிகிறது. அங்கெல்லாம் அன்றாடம் நடக்கும் படுகொலைகளைப் பற்றி நாளேடுகளில் நாள்தோறும் படிக்கிறோம். 1983 சூன் திங்களுக்குப் பின்னர் தீவிரக்காரர்களைப் பிடிக்க என்று பொற்கோவிலுக்குள் படைத்துறையும் காவல் துறையும் உள்ளே நுழைவது அன்றாட நிகழ்ச்சிகளாகி விட்டன. மாநில-நடுவணரசுகளால் அங்குச் சட்டம் ஒழுங்கும் நிலைப்படுத்தி மக்களுக்கு அமைதியான வாழ்வு தர இயலவில்லை. இந்திய தேசியக் கொடியை இறைவனுக்கு ஒப்பாக வணங்குகிறார்கள்.

பேராயக் கட்சிக்காரன் முன்னிலையிலேயே, 1987 சனவரி திங்கள் 26-ஆம் நாள், தனிநாடு கேட்கும் சீக்கியப் போராளிகள், பஞ்சாப் மாநிலம் முழுவதும் காலிசுத்தான் கொடியை ஏற்றி இருக்கிறார்கள். அமிர்தசரசு நகரில் உள்ள சீக்கியர்களின் புனிதக் கோயிலான பொற்கோயில் பகுதியில் காலிசுத்தான் கொடியை ஏற்றினார்கள். அத்துடன் மூன்று வண்ண தேசியக் கொடியை தீ வைத்துக் கொளுத்திப் பாதிக் கொடியினை காலி-சுத்தான் கொடிக்குப் பக்கத்தில் பறக்க விட்டுத்தேசியக் கொடியை குறைமதித்துள்ளார்கள். இந்த நிகழ்ச்சி நடக்கும்போது அங்குக் கூடியிருந்த ஆயிரக் கணக்கான மக்கள் இந்திய ஆட்சிக்கு எதிராக முழக்கங்களை முழக்கிப் பிந்தரன்வாலேக்கு ஆதரவாக வாழ்த்து பாடியிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் நிறுத்தப்பட்டு இருந்த படைத்துறையினரும் இந்த நிகழ்ச்சிகளை நேரில் பார்த்-துக் கொண்டு இருந்தார்களே தவிர தடுக்கவில்லை. இந்த நிலையில் இந்திய தேசிய கொடியை மற்ற தேசிய இனங்கள் ஏன் வணங்க வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழர்களும் ஏன் தேசிய கொடியை வணங்கவேண்டும்? மதிக்க வேண்டும்? அந்தக் கொடியைத் தமிழர்கள் உருவாக்க-வில்லை. அதில் அவர்களுக்குப் பங்கும் இல்லை. அதில் தமிழர்களின் இன்னல்களும் இல்லை. அக்கொடி உருவானதே தனி வரலாறு.

முதன்முதலில் 1885-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள், 28-ஆம் பக்கல் தொடங்கப்பட்ட இந்திய தேசியப் பேராயக் கட்சிக்குக் கொடி இருக்கவில்லை. 1906-ஆம் ஆண்டு தான் இந்தியாவிற்கு ஒரு கொடி வேண்டும் என்று எண்ணம் சிலருக்கு ஏற்பட்டது. 1861-ஆம் ஆண்டில் பம்பாயில் பிறந்த தாமா என்பவர், (இவர் வணிகர் ஒருவரின் மகன்) ஒரு தேசியக் கொடியினை உருவாக்கி செர்மணி நாட்டில் பறக்க விட்டார். 1908-இல் அப்பொழுது இக்கொடியின் மேல்புறம் செம்மஞ்சளும் (ஆரஞ்சும்), நடுவில் வெள்ளை, கீழ் பச்சை என்று மூன்று வண்ணங்கள் இருந்தன. ஆனால் இப்பொழுதுபோல் இல்லாமல் ஆரஞ்சு நிறபகுதியில் ஏழு விண்மீன்களும், எட்டுப் புள்ளிகளும், வெள்ளைப் பகுதியில் வந்தே மாதரம் என்னும் சொல்லும், பச்சைப் பகுதியில் கதிரவனும், பொறிக்கப்பட்டு இருந்தன. விடுதலைக் கிளர்ச்சி தீவிரம் அடைந்த

1916-17 -ஆம் ஆண்டுகளில் மராட்டிய மாநிலத் தலைவர் லோக மானிய திலகரும், அயர்லாந்து நாட்டில் பிறந்து வளர்ந்து இந்திய விடுதலைக்குப் போராடிய அன்னி பெசன்ட் அம்மையாரும் சேர்ந்து ஒரு தேசியக் கொடியினை உருவாக்கினார்கள். அதில் செம் மஞ்சள், (ஆரஞ்சு) பச்சை இருவண்ணப்பட்டைகள் ஒன்பதும், கொடியின் மேற்புற முனையில் 'யூனியன் சாக்'கொடியும் கீழ்ப் பகுதியில் ஏழு விண்மீன்களும் பொறிக்கப்பட்டு இருந்தன.

1921-இல் காந்தியடிகள் ஒரு கொடியினை உருவாக்கினார்கள். அக் கொடியின்மேல்புறம் வெள்ளை, நடுவே பச்சை, கீழே சிவப்பு நிறங்களில் இராட்டினம் பொறித்ததாக அமைத்தார். பின்னர் 1931 ஆண்டில் இக் கொடியினை மாற்றி முறையே செம்மஞ்சள், (ஆரஞ்சு), வெண்மை, பச்சை நிறங்களும், வெண்மையில் இராட்டினம் ஆகவும் அமைத்தார்கள். 1947 ஆகத்து திங்கள் 15-ஆம் நாள் இந்தியத்துணைக் கண்டம் விடுதலை பெற்ற பின்னர் அக்கொடியில் ஒரு மாற்றம் செய்தனர், வடநாட்டு தலைவர்கள் ஆன காந்தியடிகள், பண்டிதர் நேரு, வல்லபாய் பட்டேல், கலம் ஆசாத், கோவிந்த வல்லபந்து, இராசேந்திர பிரசாத் ஆகிய பேராயக் கட்சியின் தலைவர்கள். அ'து என்ன மாற்றம் என்றால் முறையே செம்மஞ்சள் (ஆரஞ்சு), வெண்மை, பச்சை நிறங்களில் இராட்டினத்துக்குப் பகரமாக அசோக சக்கரம் பொறித்தார்கள். அதுவே இன்று வரை இந்தியாவின் தேசியக் கொடியாக மதிக்கப்படுகிறது.

இந்தக் கொடி உருவானதில் எந்தத் தமிழ் மகனும் பங்கு பெறவில்லை. இக்கொடியின் அமைப்பு முறைகளுக்கும் தமிழர்களுக்கும் உடன்பாடு இல்லை. தமிழர்களின் வரலாற்றுச் சிறப்புகளோ, கலை பண்பாடுகளோ, தமிழர்களின் உயர்ந்த நோக்கங்களோ, அவர்களின் மாண்புகளோ எவையும் கடுகளவு கூட அதில் குறிக்கப் பெறவில்லை.

எனவே தமிழர்களுக்கென ஒருகொடி - உலகத்தமிழர்களுக்காகப் பாடுபடும் கொடி - தமிழர்களின் இழந்த உரிமைகளுக்குப் போராடும் தமிழ்க்கொடி - ஒவ்வொரு தமிழன் இல்லத்திலும் பறக்க வேண்டும்.

இன்று பஞ்சாப் மாநிலம் முழுவதுமே போர்க்களம் பூண்டுள்ளது. சீக்கியவினத்தின் எழுச்சியை அடக்க, அதன் குரல் வளையை நெறிக்க - இந்தியப் பேரரசு இலக்கக்கணக்கான போர்ப்படைகளையும், எல்லைக் காவல் படைகளையும், சிறப்புக் காவல்படைகளையும், போர்க் கருவிகளையும் குவித்து வைத்துப் பஞ்சாபில் தோன்றியுள்ள மக்களின் புரட்சியை அடக்கிவிட முயலுகிறது. எல்லா நிலைகளிலும் இந்திய மாநிலங்களால் சூழப் பட்ட கடல் வழி ஏது மின்றி இருக்கும் பஞ்சாப் மாநிலம் வெற்றி பெறுமா? எதிர்காலத்தில் காலித்தான் அமையுமா? காலம்தான் பதில் சொல்லும். சீக்கிய இளைஞர்கள் கமுக்கமாகச் சிறு, சிறு

குழுவாகப் படைகளை அமைத்துக் கொண்டு காலித்தான் விடுதலை இயக்கம் என்ற பெயரில் இயங்கி வருகிறார்கள். இதன் தலைவர், அரோரர்சிங். இவர் காலித்தானுக்குப் போராடும் குழுக்களை ஒன்று சேர்ந்து அக்காப்புக்கு இதன் அமைப்புகளை ஏற்படுத்தி வருகிறார். இதில் குறிப்பிடத்தக்க செய்தி என்னவென்றால், இந்த இயக்கத்தில் பஞ்சாப் மாநில உள்ளாட்சித் துறை அமைச்சர் மோகிந்தர்சிங்கின் மகன் சுர்பீத் சிங்கும், இந்த இயக்கத்தில் ஈடுபட்டவர் என்றும் அவரை காவல் துறை சுட்டுக் காயப்படுத்திச் சிறை பிடித்தது என்று செய்தி கூறுகிறது. பஞ்சாபில் என்ன நடக்கிறது என்று முழுமையாக நமக்குத் தெரிவதில்லை. எல்லாச் செய்திகளும் தணிக்கை செய்யப்படுகிறது. அங்கு என்ன நடக்கிறது என்று அங்குள்ள மக்களுக்கே தெரியவில்லை. அந்தஅளவிற்குச் செய்திகள் இரட்டிப்பு செய்யப்படுகின்றன.

பஞ்சாப் பற்றிப் பேசினாலும் எழுதினாலும் அல்லது தீவிரக் கொள்கையாளரின் அறப்போர், ஒழுக்க நெறிகளை எழுதினாலும் அஞ்சத்தகுந்த குற்றமாகக் கருதுகிறது இந்திய அரசு.

எழத்தான் வேண்டும்!

-பாவலர் இளஞ்சித்திரன்.

எழத்தான் வேண்டும் நானும் நீயும்!
இலையெனில் இங்கே எதுதான் ஆகும்?

(எழத்தான்)

பழத்தார்க் குலைபோல் தமிழினம் வீழ்வதா?
பகைப்புல எருதுகள் நல்நிலம் சூழ்வதா?

(எழத்தான்)

உழத்தான் தமிழ்நில மக்கள் மனத்தில்
உரிமை உணர்ச்சிகள் விளையும்! விளையும்!
தொழத்தான் பிறந்தவர் நாமிலை! பகையைத்
தூள்தூள் ஆக்குவம்! அறுத்திடும் அடிமைத் தளையும்!

(எழத்தான்)

நடத்தான் தமிழர் நாமெனும் விதைகள்!
நம்மிடைக் கட்சிகள் தொலையும்! தொலையும்!
கெடத்தான் சாதிகள் கெடத்தான் ஒற்றுமை
கிளைக்கும்! நாம்விரைந் தேறுவம் வெற்றி மலையும்!

(எழத்தான்)

வரத்தான் தமிழ்நீர் வயல்மிக மிகத்தான்
மதத்திமிர் போலிமை மறையும்! மறையும்!
தரத்தான் உடலுயிர் உழைப்பைத் தரத்தான்
தமிழ்நிலம் மலரும்! தமிழ்க்கொடி வானில் நிறையும்!

(எழத்தான்)

பெருஞ்சித்திரனார் நேருரைகள்!

செல்வி. ந. அங்கையற்கண்ணி. க.மு; கல். இ., அவர்கள் தம் இலக். இ. (பி. லிட்) பட்ட ஆய்வுக்காக (சென்னைப் பல்கலைக் கழகம் 1984-85 பெருஞ்சித்திரனார் அவர்களை 'அறிவியக்கம்' திங்களிதழ் — ஓர் ஆய்வின் பொருட்டு 21.2.85 அன்று நேர்முகம் கண்டு கேட்ட வினாக்களும் விடைகளும்.)

வினா: 1. தென்மொழி பற்றியும், சாலை. இளந்திரையன் பற்றியும் கூறுங்கள் :

விடை : 'தென்மொழி' இதழ் 1959- இல் தொடங்கி வெளி வந்து கொண்டிக்கிறது. சாலையார் அவர்களுடைய பல கருத்துகள் எனக்கு மாறுபாடானவை. ஐந்து இயக்கங்கள் சேர்ந்து ''தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணி'' 'தமிழக மக்கள் உரிமை மீட்புக் கூட்டமைப்பு' என்று நாங்கள் தொடங்கிய இயக்கங்களில் சாலையார் முன்பு இருந்தார். இப்போது 'தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணியில்' இல்லை.

2. திரு. சாலை: இளந்திரையன் அவர்கள் நடத்தும் அறிவியக்கம் இதழைப் பற்றிய கருத்து என்ன ?

அறிவியக்கக் கருத்துகள் உண்மையாகவே புரட்சி அடிப் படையில் உண்மை உணர்வை வெளிப்படுத்துகின்றன. அத் தகைய கருத்துகளை அறிவியக்க இதழ் வெளிப்படுத்துகின்றன. தொடக்கம் முதல் இன்று வரை நெறி பிறழாமல், கொள்கை மாறாமல், ஒரே நோக்கம், கொள்கையில் விட்டுக் கொடுக்கா மலும், எழுதி வருவது ஒரு சிறப்பு. ஒரே நோக்கத்தோடும் தம் குறிக்கோளை விட்டுக் கொடுக்காமலிருக்கும் வகையிலும் இது கொள்கை இதழ். பெரியார் கருத்தைத் தீவிரமாக வெளியிடு பவர் சாலையார். பெரியார் கட்சியினர் கொடுக்கும் நெகிழ்ச்சி எண்ணங்களைக் கூட கண்டிக்கக் கூடியவர். அவர்களை நேரிடை யாகவே தாக்கி சாலையார் அறிக்கை வெளியிட்டுள்ளார். கொள் கைக்காக நேரடியாகத் தாக்கியது சிறப்பு. பெரியார் கொள் கையில் உரத்த வலு உடையவர். போக்கு மட்டுமல்லாது கடைப் பிடிக்கும் தன்மையும் சிறப்பு வாய்ந்தது. சில இயக்கங்கள் பெரி யார் பெயரைத்தான் பேசுகின்றன. பெரியார் கொள்கையைக் கூறுவதில்லை. பெரியார் மட்டும்தாம் சீர்திருத்தக்காரர் என்று கூறக்கூடிய தகுதி வாய்ந்தவர். குமுதாயத் தொண்டர் வேறு; குமுகாயச் சீர்திருத்தக்காரர் வேறு. சீர்திருத்தக்காரர்க்குக் குமுகாயத்தை எதிர்த்துப் பேசுவதால் வரவேற்பு இருக்காது. ஆனால் குமுகாயத் தொண்டருக்கு அரசியல், பண்பாடு, குமுகாய நிலைகளில் பணிபுரிவதால் வரவேற்பு இருக்கும். சீர் திருத்தக் காரர்கள் எதிர்காலத்தை அமைக்க முற்படுவார்கள். பெரியார் குமுகச் சீர்திருத்தக்காரர். அவரைத் தொடர்ந்து சிறப்பாகக், குமுகாயச் சீர்திருத்தம் செய்து வருபவர், திரு. வே. ஆனைமுத்து.

இப்படித்தான் குமுகாயம் இருக்கவேண்டுமென சீர்திருத்தக்காரர் கூறுவார்.

சாலையார் தமக்குச் சரியெனப்பட்ட கொள்கையைத் துணிவோடு கூறுவார். இதழில் விளம்பரங்கள் அதிகமில்லை. கொள்கையை மட்டும் கருதி, மக்கள் நலனை மட்டும் கருதி இதழ் இயங்கி வருகிறது. 26 ஆண்டுகள் தென்மொழியிலும் விளம்பரங்கள் இல்லாமல், வருவாய் கருதாமல் கருத்துகள் மட்டும் வெளி வந்து கொண்டிருக்கின்றன.

நான் 'அறிவியக்க'த்தில் இதுவரை எழுதியதில்லை. தொடர்ந்து படிக்கின்றேன். என்னைக் கவர்ந்த கூறுகள்: சில கருத்துகளை வெளிப்படுத்தும் முறையும், யாருக்காகவும் நெகிழ்ச்சி கொடுக்காமல் துணிந்து சொல்லும் முறையும், எனக்குப் பிடித்துள்ளன. அவர் எழுதும் எழுத்தில் உயிரோட்டம் உள்ளது. உரைவீச்சு (பா நடை) என்பது பாரதியாரே தொடங்கியது. உரை வீச்சு என்பது புதிய பெயர் கொடுத்தாலும் சிலம்பில் ''உரையிடையிட்ட செய்யுள்'' போல் ''பாட்டிடை உரையில்'' சாலையார் எழுதியுள்ளார். பாரதியார் எழுதியதற்கு ''வசன கவிதை'' என்று கூறுகிறார்கள். உரைவீச்சு என்று புதிதாக சாலையார் பெயர் கொடுத்தார். 20 ஆண்டுகளுக்கு முன்பே 'கற்பனை ஊற்று' என்னும் என்னுடைய நூலில் ''உரை தழுவிய பாட்டுகள்'' கொண்டு எழுதி உள்ளேன். அந்த நடைக்கு ''உரைப்பா'' என்று நான் பெயர் கொடுத்திருந்தேன்.

3. உரைப்பாவில் பாட்டு முறை எப்படியிருக்க வேண்டும்?

ஒரு வரியில் கருத்து முடிவு இருக்கவேண்டும்;
சொற்கள் குறைவாக இருக்கவேண்டும்;
ஒரு கருத்தை ஒரு வரியில் முடிக்கவேண்டும்; அதன் தொடர்ச்சி அடுத்த வரியில் வரலாம்;
குறுகிய சொற்களில் முடிக்க வேண்டும்;
பாட்டின் கருப்பொருளை உரையில் கொண்டுவருவது சிறப்பு;
பாட்டை யாப்பில் அடக்காமல் உரையாகக் கொண்டுவர வேண்டும்;
உணர்ச்சி, முடிவில் தானாக வரவேண்டும்;
நடையில் உணர்வின் வெளிப்பாடும் கருத்தும் இருக்க வேண்டும்;
ஒவ்வொரு சிறுவரியும் ஒவ்வொரு கருத்தைக் கொடுக்க வேண்டும்.

ஆனால், அறிவியக்கம் உரைவீச்சு இப்படிப் பெரும்பாலான நிலைகளில் இருப்பது இல்லை. உரைவீச்சு நீளமாக இருக்கிறது. உரைவீச்சு எனும் பெயர் நன்றாக இருக்கிறது. பொதுப் பெயராக இருந்தால்தான் சிறப்பு; ஒரு வகையில் இது புதுப்பாடல்

(புதுக்கவிதை) போலவேதான்; ஆனால் வரிகள் நீண்டுள்ளன. இதற்கு இலக்கணமில்லை. பாட்டைத் தொடர்பு படுத்தாமல் உரையை மட்டும் கொண்டு செல்வது சிறப்பு. உரைப்பா போலத்தான் இ'து இருக்கிறது. பாட்டு எழுதத் தெரிந்த உணர்வு உடையவர்கள்தாம் உரைப்பா எழுதுவர். அவருடைய எழுத்து-களை, கருத்தை, ஆளும் முறையைப் பாராட்டுகின்றேன்.

4. சாலையாரின் மொழி நடை பற்றித் தங்கள் கருத்து யாது?

சாலையாரின் எழுத்து நடை, ஒன்றுபோலவே கருத்தாழம் கொண்டு தேவையை மட்டும் கொண்டு எழுதப்படும் நடை; இதழில் பலர் எழுதுகிறார்கள்.

சாலையாரின் நடை கருத்துத் தெளிவு, துணிவு, வலிவு கொண்டு இருந்தும், இவர் தமிழ்ப் பேராசிரியராக இருந்தும், பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்துவதும் பாராட்டத் தக்கதாக இல்லை; வருந்தற்குரியது. மொழித் தொடர்பான கொள்கை இவருக்கு இருக்க வேண்டும். பிறருக்கு எடுத்துக் காட்டாக இருந்தால் சிறப்பு. அரசியல், குமுகாயம் இவற்றில் தனி நடையை வைப்பது போல, இவர் மொழியிலும் ஒரு சிறப்பு நடையைக் கையாளுதல் வேண்டும். ஆனால் மற்றவர்களைப் போலவே, இவரும் கலப்பு நடையைக் கையாளுவது, எனக்குப் பிடிக்கவில்லை. பிற மொழிகளில் ஒரு நூலைப் படிப்பதன் மூலம் கருத்தோடு மொழியையும் விரும்பிக்கற்று, வளர்ச்சி பெறுகிறார்கள். ஆனால் தமிழைப் பொறுத்தவரையில் அப்படியில்லை; மொழியில் அக்கறை காட்டவில்லை. அது தவிர அவர் கூறும் செய்தியும் முறையும் பிடித்துள்ளன.

5. அவர் இதழ் வழிக் கருத்துப் பரப்புதல் எப்படி?

இயக்கமென்ற சொல்லுக்குச் செயல் என்று பொருள் : ஓர் இயக்கத்திற்கு இதழ் கட்டாயம் தேவை. இயக்கம் கொள்கையை வெளிப்படுத்தும் நிலையில் மட்டும் நின்று விட்டால் பயனில்லை. கருத்து என்பது இயக்கத்தின் முதல் படி நிலை; பின் அந்தக் கருத்து செயலாக வெற்றி பெறும் நிலையில் பாடு பட்டால்தான் வெற்றியுண்டு. 'அறிவியக்கம்' இதழ் கருத்தளவில் மட்டும் இயக்கக் கொள்கையை விளக்கும் இதழாக இருக்கிறது. ஓர் இயக்கம் பல நிலைகளில் பல செயல்களைச் செய்யவேண்டும். கருத்தை வெளிப்படுத்துவது மட்டும்தான் இதிலுண்டு; பரப்புவது இல்லை. இதழை அச்சிடுவது வேறு ; அதனை மக்களிடத்தில் கொண்டுசெல்வது வேறு. மக்கள் என்றால் பொதுமக்கள். இயக்கத் தொடர்பற்ற மக்களிடத்தில் எப்படிக் கருத்து சொல்லப் படுகின்றதோ, அஃது எவ்வகையில் அவர்களைக் கவர்கிறதோ அதுதான் வளர்ச்சியாகும். ஆனால் இருக்கிறவர்களிடத்திலேயே அ'து இருக்கிறது. பிரான்சு, செருமனி, இங்கிலாந்து, சுவிட்சர்

லாந்து முதலிய ஐரோப்பிய நாடுகளுக்கும் சிங்கப்பூர், மலேசியா, கனடா, இலங்கை, பர்மா முதலிய நாடுகளுக்கும் தென்மொழி, தமிழ்நிலம், தமிழ்ச்சிட்டு செல்கின்றன. 'உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்' சார்பாகப் பிரான்சிலும், செருமனியிலும் பல நிகழ்ச்சிகள் நடந்தன. தனித்தமிழ்க் கொள்கையெனத் தென்மொழியில் குறிப்பிட்டு வருகிறேன். சொல்ல வேண்டியதைச் சொல்லாமல் மறைப்பது ஒரு குற்றம். 'பிரச்சாரம்' என்ற முறையில் கருத்தைப் பரப்பும்போது குறுகிய நோக்கத்துடன் கருத்தைப் பரப்புவது நல்லதன்று. இந்திரா காந்தியின் சாம்பல் பற்றிய வழக்குப்பற்றிச் சாலேயார் தம் கருத்தை எழுதும் போது, அது தொடர்பானவரின் பெயரைக் குறிப்பிடவில்லை என்பது சிறப்புடையதன்று. இது கருத்துப் பரவுவதற்குரிய நிலையன்று. கொள்கைக்கு உகந்த செய்தியைச் சொன்னால்தான் நன்மையாகும். சிறிய இதழாகிய அறிவியக்கத்தைப் பெரிதாக வளர்க்கலாம். ஒரு புதிய கொள்கைக்கு ஏற்படும் எதிர்ப்புகளை நான்கு படி நிலைகளாக விவேகானந்தர் கூறியுள்ளார். கொள்கையை முதலில் ஏளனப்படுத்துவார்கள். மேற்கொண்டும் சொல்லிக் கொண்டிருந்தால் அதை இழிவு படுத்துவார்கள். அதையும் பொருட்படுத்தாமல் மேலும் தொடர்ந்து சொன்னால், எதிர்ப்பார்கள். இறுதியில்தான் ஏற்று கொள்வார்கள். 65-இல் இரண்டு மாதம் சிறையிலிருந்தேன். 76-இல் நெருக்கடி நிலையிலும் ஓராண்டுச் சிறையிலிருந்தேன். இடையில் தமிழக விடுதலை மாநாடு என்ற பெயரில் சென்னை, மதுரை, திருச்சியில் நடத்தினோம். பெரியாருடைய கொள்கைகள் சிலவற்றை நான் ஏற்பதில்லை. எழுத்துச் சீர்திருத்தத்தில் முதல் கட்டத்தை நான் கருத்தளவில் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அதைக்கூட இப்பொழுது நடைமுறைப் படுத்துவதை நான் விரும்பவில்லை. மொழி திருத்தப்பட்ட, பின்னரே, எழுத்துக்கு முகாமை கொடுக்கவேண்டும் என்பது என் கருத்து. இல்லெனில் எழுத்து இருக்கும். மொழி இருக்காது. தமிழின் இன்றைய நிலை ஒருவாறு அப்படிப்பட்டதே. இதழைக் கொள்கைக்காக நடத்துவதால் கொள்கையைப் பரப்புகிறார்கள். இன்னும் பெரியதாக வளர்க்கலாம். பொருளியல் வசதியில்லாமல் இருக்கலாம்.

6. அறிவியக்கம் இதழ் வேறுபடும் தன்மை என்ன ?

இதில் நிறைய கட்டுரைகள் வருவதில்லை. சாலேயார் கட்டுரை, சிறு சிறு செய்திகள், உரைவீச்சு ஆகியவை தொடர்ந்து வருகின்றன. இவர்தாம் பெரிதும் எழுதுகிறார். வேறு இதழிலிருந்து வரும் செய்திகளையும் எடுத்துக் கூறுகிறார். இதழை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் படித்து முடித்துவிடலாம்.

7. சாலேயாரின் எழுத்துச் சீர்த்தம் பற்றி நீங்கள் சிறப்பாகக் கூறிவது யாது ?

பெரியார் எழுத்துச் சீர்திருத்தத்தை நான் எதிர்ப்பதாக

நினைக்கிறார்கள். பெரியார் எழுத்துச் சீர்திருத்தம் என்பது ஏற்கனவே இருந்தது தான். 23 பேர் அடங்கிய சீர்திருத்தக் குழுவில் நானும் பாவணரும் மட்டுமே எதிர்ப்புச் செய்தோம், எழுத்துச் சீர்திருத்தம் இப்பொழுது தேவையில்லை என்று. அரசு வெளியீடாகிலும் தூய தமிழில் வெளிக்கொணரலாம். எழுத்துச் சீர் திருத்தத்தை விட மொழிச் சீர்திருத்தம், மொழித் தூய்மையே முதலில் வேண்டும். அறிவியல் வளர்ச்சிக்கும் கால விரைவிற்கும் தேவைக்கும் ஏற்ப எழுத்துச் சீர்திருத்தம் தேவையே. அறிவு வளர்ச்சி நிலையில் கருத்து வேறுபாடு, கருத்து மாற்றம் ஏற்படலாம். ஆனால் சாலய் என்ற சொல் அமைப்பை ஏற்றுக் கொள்ள இயலாது. ஐ-அய், இப்படி மாற்றுவது பல நிலைகளில் இடராக இருக்கும். சில எழுத்துகளைத் தட்டச்சு, தொலையச்சு முதலிய வற்றில் மட்டும் பயன்படுத்தலாம், எடுத்துக்காட்டாக லை,னை, ணை என்பன போன்றவற்றைக் கையெழுத்தில் பயன்படுத்துவது கடினம். ஐந்து சுழியா, ஆறு சுழியா என எண்ணிக் கொண்டு எழுத வேண்டும். இஃது ஒருவகை வேகத் தடையையும், கருத்துத் தடையையும் ஏற்படுத்தும். மேலும் தொடக்கத்தில் இவ்வாறு இருந்துதான், பின் கையெழுத்து எளிமைக்காக, னை, ணை என்று கீழ்விலங்கை, மேல் விலங்காகப் பயன்படுத்தினர். மொழி என்பது எழுத்தை மட்டும் கொண்ட எழுத்துக் கூட்டமன்று. எனவே முதலில் மொழியைச் செம்மைப் படுத்த வேண்டும். மொழியை விட்டுவிட்டு எழுத்தை மட்டும் சீர்திருத்த வேண்டும், என்று நினைப்பது உடல்நலத்தைக் கவனிக்காமல், உடையை மட்டும் சீர்திருத்தவேண்டும் என்பது போலாகும். அது தவறு. மொழியை தூய்மைப் படுத்துவதில் உணர்ச்சி வேண்டும். எழுத்துச் சீர்திருத்தைக் கருவிகளுக்கேற்ப எழுதும் நிலையை அரசு கொள்ளலாம். ஆனால் சாலையாரோ அதையும் மீறி அளவுக்கு அதிகமாகவே எழுத்துத் திருத்தத்தை மேற்கொண்டும் எழுதியும் வருகிறார். அந்நிலை, அறிவியல், ஒலியமைப்பு, கருத்தமைப்பு ஆகியவற்றுக்கு எதிரானது. எழுதும் வேகத்தைத் தடுத்து நிறுத்துவது; கருத்துச் சிந்தனைக்கு முட்டுப்பாடானது. எனவே அவரின் எழுத்துச் சீர்திருத்தப் போக்கை வரவேற்க இயலாது.

தனித்தமிழ் சிறுவர் கலை இதழ்

"தமிழ்ச்சிட்டு"

ஆண்டுக் கட்டணம் : உருபா 9.00
தனியிதழ் : ,, 0.75

ஓரிதழுக்கு உருபா 1-50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

'தமிழ்ச்சிட்டு', சென்னை-5

காதலா ? கடமையா ?
- ஒரு காப்பியநோக்கு!

கடலூர்: ப. மணிமாறன், க.மு., கல்.மு.,

முன்னுரை :- பாவேந்தர் பாரதிதாசன் எழுதிய காப்பியங்களுள் காதலா ? கடமையா ? குறிப்பிடத்தக்க காப்பியம். முப்பத்தெட்டு இயல்களையுடைய இக்காப்பியத்தைச் சிறு காப்பியம் என்றும் கதை பொதி பாட்டு என்றும் கூறுவர் ;

முதற்காப்பியங்கள் என்று போற்றப்படுகின்ற சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை ஆகிய மூன்றும் (சிலம்பில் பெரும்பாலும்) ஆசிரியப்பா வகையிலும் பின்னர் தோன்றிய சிந்தாமணி, சூளாமணி, நீலகேசி, பெரிய புராணம், வில்லிபாரதம், சீறாப்புராணம், கம்பஇராமாயணம் ஆகிய காப்பியங்கள் நிலைமண்டிலம் (விருத்தப்பா) வகையிலும் எழுதப் பெற்றன, தொடக்கக் காலத்தில் ஆசிரியம் முதலிய பாக்களும், பிற்காலத்தில் நிலைமண்டிலக் (விருத்தமும்) காப்பிய வடிவம் பெற்றுள்ளன.

பாவியக் கூறுகள் :- ஒரு மொழியைச் சிதையாது காப்பது காப்பியம். இலக்கணத்தின் இயல்பு மரபு வழாமல் காத்தல்... காப்பு நூல் என்று அதற்குப் பெயரிட்டனர். காப்பு இயன்றது காப்பியம். தமிழ் நூல்கள் இலக்கியம் காப்பியம் என இரு வேறு வகையின. இலக்கு இயன்றது — இவற்றின் இயல்பை உணர்த்துவது இலக்கியம் ; மொழியின் காப்பு இயன்றது காப்பியம் என்பது பொருந்தும்'' 1 என்று பெயர் விளக்கம் தருவர்.

''காப்பியக் கூறுகளின் எண்ணிக்கை ஏறத்தாழ நாற்பது எனும் அளவுக்குச் செல்லினும் அவற்றை ஒரு சில வகைகளில் உட்படுத்தலாம். நான்முகம் நுவல்பொருள் தலைவன் இயற்கை வளன் முதலிய வண்ணனைகள் அகவாழ்வு, புறவாழ்வு, அக அமைப்பு, கதை வடிவம், பாவமும் யாப்பும் நடையும் ஆகிய இப்பத்துப்பகுதிகளுள் நான்முகம் நூலுக்குப்புறம்பாக அமைவது. பிற ஒன்பதும் நூலாக அமைவன''2 என்று காப்பியக் கூறுகளைச் சுட்டியிருப்பது ஈண்டு நோக்கத்தக்கது.

காப்பிய அமைப்பு : காதலா ? கடமையா ? எனும் இச்சிறு காப்பியம் 1938 - ஆம் ஆண்டில் '' சுதந்திரம் நம் ஆத்மா' என்ற பெயரில் சிறு கதையாகவும் பின்னர் சில மாறுதல்களுடன் நாடகமாகவும் ஆக்கப்பட்டு, இறுதியில் 1947 - ஆம் ஆண்டு இறுதி வடிவம் பெற்றது''3. இந்நூல் முதற் பதிப்பின் முன்னுரையில் பல ஆண்டுகளுக்கு முன்பே இதனை எழுதியதாகப் பாவேந்தர் குறிப்பிடுகிறார்.

தங்கு தடையின்றிக் கருத்துகளை நிரல்படக் கூற வேண்டும் என்ற நோக்கில் இணைக்குறள் ஆசிரியப்பா யாப்பை இக்காப்பி

யத்தில் பயன்படுத்தியுள்ளார். பாவேந்தரின் பாண்டியன் பரிசு, குறிஞ்சித்திட்டுப் போல இக்காப்பியம் சிறப்புப் பெறுதது வியப்புக்குரியதே.

நல்ல கதைக் கருவும் நயத்தக்க உரையாடல்களும் உயரிய கொள்கை முடிவும் இக்காப்பியத்தின் தனிச் சிறப்புகள். நல்ல அமைப்புடைய இக்காப்பியக் கதை காதலை உட்பொருளாய்க் கொண்டதே. பாண்டியன் பரிசு போல காதல் வென்று இன்பியலாக முடிகிறது.

''இலக்கியம் வாழ்க்கையின் விளக்கமாகும். வாழ்க்கை உண்மைகளைக் கவிஞர்கள் நயமாகவும் சுவையாகவும் முருகியல் இன்பம் பெருகத் தம் கவிதையில் உணர்த்துகின்றனர். தாம் சிறப்பாகக் கருதும் உண்மைகளைப் பாவேந்தர் பாரதிதாசன் சிந்தனைச் சிற்பமாகக் கவிதைகளில் வடித்துள்ளார்''4 என்பது முற்றிலும் உண்மையே!

கதைப் போக்கு : இச்சிறு காப்பியத்தின் கதை உறுப்பினர்களாக மாப்பேரரசு, ஒள்ளியோன், மகிணன், வாட்பொறை, தாரோன், தங்கவேல், கிள்ளை ஆகிய எழுவரே இடம் பெறுகின்றனர். மகிணன் காப்பியத் தலைவன் ; கிள்ளை காப்பியத் தலைவி.

கொன்றை நாட்டு மக்கள் தலைவனை மகிணன் மாழை நாட்டுக்கு அடிமைப்பட்டிருந்த தன் தாய்நாட்டை மீட்க முயற்சி செய்கிறான். விடுதலை தருவதாக முதலில் கூறிய மாழைப் பேரரசன் மகிணனின் காதலி கிள்ளையைக் கண்ட பிறகு அவள் தன்னை மணக்கஇசைந்தால்தான் நாட்டுக்கு விடுதலை என அறிவிக்கிறான். கிள்ளை அதற்கு இசையவில்லை.

மகிணனும் மன்னனுக்கு மறுப்பைத் தெரிவிக்கிறான். எனவே மன்னன் சிறைப்படுத்துகிறான். தோழன் தங்கவேலின் மடல் கருத்துப்படி காதலியைக் கொன்று மன்னனின் ஆசையைப் போக்கி நாட்டை விடுவிக்க முயற்சிசெய்கிறான். காதலியைக் கொல்ல வாளெடுத்தவன் கண்ணீர் விட்டுத் தயங்குகிறான். தன்னை மாய்த்துக் கொள்ள கிள்ளையே வாளை ஓங்கும் போது மாறு வடிவத்தில் பார்த்திருந்த மன்னன் விடுதலை அளித்ததாகக் கூறி மகிணன், கிள்ளை முதலியோரிடம் நாட்டை ஒப்படைத்துத் தன்னுடு செல்கிறான். பின்னர் மகிணன் கிள்ளையுடன் பெற்றோரை அடைந்து வாழ்த்துப்பெறுகிறான்.

இல்லை என்பதே இனி இருக்காது. ஒவ்வொருவருக்கும் ஒரு வீடு; ஒரு நிலம் ; ஒரு தொழில் ; ஓர் ஏர் உழவுமாடுகள் ; இது காப்பியத்தின் இறுதியில் நாட்டப்படும் நாட்டின் அரசமைப்பாகும்.

''எல்லாக் காப்பியங்களுக்கும் தொடக்கம், திருப்பு நிலை, உச்சநிலை, வீழ்ச்சி என்ற நிலைகள் அமைவதே சிறப்பு எனக் குறிப்பிடுவர்.

தொடக்கம் :

"ஐந்து நாட்பினே நாம் அங்கு வருவோம்
வந்து விடுதலே வழங்குவோம் நன்றே'

என்ற மாழை நாட்டு மன்னனின் திருமுகம் கண்டு அனைவரும் மகிழ அந்நாட்டின் விடுதலைக்குப் போராடிய மக்கள் தலைவன் மகிணன் "வெற்றி நிலத்தில் விளைவதாம் விடுதலை", மற்றது கெடுதலை மறவர் மாட்சிக்கே" என்பது இக்காப்பியத்தின் தொடக்கம் எனலாம்.

திருப்பு நிலை :

தெள்ளுநீர் ஆடுவார்க் கண்டபோது கிள்ளையைக் கண்டு உள்ளம் இழந்த மன்னன் 'நாளை விடுதலை நல்குவன்' என்று கூறுவதும் கொடி முல்லையெனக் குலுங்கச் சிரித்த அவளின் காதலைப் பெற அமைச்சனிடம் ஆவன செய்யுமாறு பணித்ததும் கதையின் திருப்பு நிலை.

உச்ச நிலை :

மன்னனின் காதலை ஏற்குமாறு பரிந்துரைக்க தங்கவேலிடம்

'தங்கவேல் என்னும் தமிழனைக் காண்கிலேன்
இங்கொரு கோழையை யான் காண்கின்றேன்'

என்று பூவிழி நெருப்பை உமிழ, போகச் சொன்ன திறமும், மிக்க வறுமையின் வயப்பட்டு அம்மக்கள் வருந்திய நிலை கண்டு

"நாட்டுக்குரிமை நன்று ? என்னுயிர்
வாட்டு காதற்கு வகை செயல் நன்று ?"

என உள்ளம் குமுறிய கிள்ளை 'மன்னனை மணப்பதினும் மாய்வதே மேல்' என்ற முடிவுக்கு வருவதும் கதையின் உச்சநிலைப் பகுதிகள்.

வீழ்ச்சி :

'உன் கையால் கிள்ளையின் உயிரைப் போக்கு;
வேறு வழி ஏது ? விளம்பினேன் இதனை'

என்று தங்கவேல் மகிணனிடம் கூற, காதல் பெரிதன்று கடமையே பெரிதென நினைந்த மகிணன் வாளைப் பெற்றுத் தனக்கென்று வாழாத கிள்ளையிடம் சென்று கொன்றை நாட்டு விடுதலைக்காகக் கொடுப்பாய் தலையை எனக் கூறுவது கதையின் வீழ்ச்சி எனக் கொள்ளலாம்.

மகிணனால் இயலாத போது தன்னைத் தானே மாய்த்துக் கொள்ள கிள்ளை முயல்வதில் இருந்து அவளின் நாட்டுப்பற்று பளிச்சிடுகிறது. "புரட்சிக் கவியில் கூறுவதுபோல மடிந்தால் இருவரும் அல்லவோ மடிய வேண்டும்! அவளை மடிக்க இவனுக்கென்ன உரிமை: கதையமைப்பில் இங்குக் களங்கம் வருகிறது. அவளை மடித்தால் காதலுந்தானே பாழ்படுகிறது! அதுவும் கோழைத்தனமே! காதலுக்கும் வெற்றி! உரிமையும் கிடைத்

தது என இரண்டுக்கும் வழி தேடி இக்கட்டத்தை அமைப்பதே சரி''6 என்பார் கூற்றை எவரே மறுப்பர்? காதலன் கொலைஞனுக மாறலாமா?

''ஒரு கவிதையை மதிப்பீடு செய்ய உணர்த்துமுறை, உள்ளடக்கம், உருவம் என்ற மூன்றைப் பற்றிய தெளிவு இருத்தல் வேண்டும். அத்துடன் கவிதை பிறந்த சூழலையும், காலத்தையும் ஓரளவேனும் அறிந்து வைத்திருத்தல் வேண்டும்''7 என்பதற்கேற்ப இதனை ஆயுங்கால் இக்காப்பிய நோக்கு நன்கு விளங்கும்.

பாரதிதாசன் பாடல்கள் பெரும்பாலும் குமுகாய விடுதலையை இலக்காகக் கொண்டு விளங்குகின்றன. ஒரு நாணயத்தின் இருபுறம் போன்று அகமும் புறமும் இணைந்தே அமைகிறது காப்பியம். அகவாழ்வில் காதலுக்கே தலைமை; புற வாழ்வில் வீரத்திற்கே தலைமை. சில சமயங்களில் காதலா? போர்க்கடமையா? என்ற போராட்டம் எழும். காதலே இடனுகக் கிடக்கும் தலைவன் இத்தகு சமயங்களில் கடமையே பெரிதெனும் முடிவுக்கு வருவான். இதை நெடுநல்வாடை போன்ற கழக இலக்கியம் வாயிலாக அறியலாம்.

முடிவுரை: காப்பியம் தன்னிகரில்லாத் தலைவனை உடைத்தாய் இருத்தல் வேண்டும் எனத் தண்டியலங்காரம் குறிப்பிடும். கோவலன், உதயகுமரன், உதயணன், சீவகன், சுந்தரன், இராமன் ஆகிய தமிழ்க்காப்பியத் தலைவர்கள் இவ்விலக்கணத்திற்கு பொருந்தியவர்கள் அல்லர்; குறையுடையவர்களே.

''நாட்டு விடுதலைக்காகத் தன் சொந்த வாழ்க்கையில் காதலியைக் கொல்லத்துணிவது இவனை மிகவும் உயர்த்துகிறது என்றும், ஊருக்குத் தலைவனுக மகிணன் இருந்தும் உற்ற தாய்க்கு உடுத்த உடையில்லை; இது பொதுவாழ்க்கையில் ஈடுபடுவோர் புரிந்து கொள்ளவேண்டிய ஒன்று; தலைவன் தூய்மையாளனுகத் திகழ வேண்டும் என்பதற்குத் தக்க எடுத்துக்காட்டு மகிணன் என்றும்''8 இக்காப்பியத் தலைவன் மகிணன் பாராட்டப் பெறுகிறுன்.

குன்று சாடிய தோளில் குருதி நனையப் போராடி விடுதலை பெறுதல் வேண்டும் என்ற பாவலரின் நாட்டியல் உணர்வு இக்காப்பியத்தில் பொதிந்து கிடக்கிறது.

அரசரையோ அரசகுடும்பத்தையோ சார்ந்தே தமிழ்க் காப்பியங்கள் தோன்றியுள்ளன எனினும் இக்காப்பியம் மக்கள் எழுச்சியை, நாட்டு விடுதலையைக் காதலினும் கடமையே பெரிது என்னும் உயரிய கொள்கையை முகாமையாகக் கொண்டு பாவேந்தரால் படைக்கப்பெற்ற சீரிய இலக்கியம் எனக் குறிப்பது சிறப்பாகும்.

அடிக் குறிப்புகள்

1. ச. வே. சுப்பிரமணியன், காப்பியப் புனைதிறன் ப. 5
2. மேற்படி ப. 20
3. கு. ப. கணேசன், பாரதிதாசன் பாடல்கள்—ஒரு திறனாய்வு, ஆய்வேடு ப. 139
4. மேற்படி ப. 286
5. ச. வே. சுப்பிரமணியன், சிலம்பும் சிந்தாமணியும் ப.7
6. மு, கோவிந்தசாமி, பாரதிதாசன் கவித்திறன் ப. 132
7. க. ப. அறிவாணன், கவிதையின் உயிர் உள்ளம் உடல ப. 52
8. மா. செல்வராசன், பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவிஞர் ப. 248

[1987 மே - 2, 3 நாள்களில் திருப்பதியில் நடைபெற்ற அனைத்திந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர்கள் மன்றப் பத்தொன்பதாவது கருத்தரங்கை யொட்டி வெளியான ஆய்வுக் கோவை முதல் தொகுதியில் இக்கட்டுரை இடம் பெற்றுள்ளது.]

உறுதி மொழி

நஞ்சிலே தொட்டெழுதி
வளர்ந்ததென் வாழ்க்கையடா ;
பிஞ்சிலே வெம்பியவன்
பிதற்றலைக் கேட்பீரோ ?

எஞ்சிய காலத்தை
இழந்துவிட ஒப்பேனடா !
கெஞ்சிநான் நிற்பதில்லை,
கீழ்மையை விட்டெறிவேன் !

செந்தமிழர் மேன்மைக்குச்
சிறுமைகள் தடையாகுமே !
வெந்துசாகும் தமிழினத்தை
வாழ்விக்க உறுதியெடுத்தேன் !

ஈழத்தில் மலையகத்தில்
மண்ணகத்தின் மூலையெல்லாம்
வாழத்துடிக்கும் என்னினத்தை
ஈடேற்ற ஈகஞ்செய்யும்

இயல்பை எய்துவேன் !
இதில்வரும் இடரெல்லாம்
எதிர்த்து வெல்லுவேன் !!
வெல்லுவேன் உறுதிகாண் !!!

- பறம்பை அறிவன்

தமிழுக்கு மாறான
தமிழ்ப் பல்கலைக் கழகமா?

அன்புடையீர்,

வணக்கம். தென்மொழி சுவடி 21, ஓலை-10: (திபி 2016 கடகம். சூலை- ஆகத் து, 1985) இல் தாங்கள் பூரித்துப் போய் எழுதிய ஆசிரியவுரையை நினைவூட்டுகிறேன். ''தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் ''தூயதமிழ் அகராதிப் பதிப்பாசிரியராக அருளி அமர்த்தம்! பாராட்டுகள்!''

''சென்ற சூலைமாத இறுதியில் (2 ஆண்டுகளுக்கு முன்பு இதே திங்களில்) தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தூய தமிழ் அகராதிப் பதிப்பாசிரியராகச் சொல்லாய்வறிஞர் ப. அருளி அவர்கள் பதவியமர்த்தம் பெற்றுள்ளார்கள், என்னும் நல்ல செய்தி, தமிழுக்கு ஆக்கமான செய்தி. நம்மைப் பல்லாற்றானும் நிறைவுறச் செய்றகிது. அவ்வமர்த்தத்தை ஏற்படுத்திய தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தையும், அதன் துணைவேந்தர் உயர்திரு. வ.ஐ. சுப்பிரமணியம் அவர்களையும் நாம் நெஞ்சு நிறைவுறப் பாராட்டுகிறோம். மகிழ்ச்சி, நன்றி''

ஐயா, ஈராண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட இவ்வரிகளை எண்ணிப் பார்க்கின்றேன்! ஆனால் இன்றைய நிலை என்ன? இந்த ஈராண்டுகளாக நடந்தது என்ன? இவற்றைத் தாங்களாவது, சிறிது எண்ணிப் பார்த்தீர்களா? தமிழ்ப் பல்கலைக் கழகம், தமிழுக்கு—உலகின் முதல் மூலத் தமிழுக்கு—சமசுகிருதம் போன்ற அரைச் செயற்கை மொழிக்கும் வேரும் தூருமான தூய தமிழுக்கு—உண்மையில் ஆக்கமும் ஊக்கமுமாகத்தான் இயங்குகிறதா? 'உண்மை அறிவுக்கு ஏற்றம் கொடுத்த' முதல் துணை வேந்தர் தம் பதவிக் காலம் முடியும் முன்பே தாமாகவே விலகினரா? அல்லது வலுக் கட்டாயமாக விலக்கப் பட்டாரா? இப்பொழுதுள்ள துணைவேந்தர் எப்படிப் பதவிக்கு வந்தார்? இத் துணைவேந்தர் பதவியேற்றத்திலிருந்து தமிழுக்கு—மொழிகள் குலமுதல்வியாம் முத்தமிழுக்கு — எத்தனை ஆக்கங்களைச் செய்துள்ளார்? தமிழ்ப் பல்கலைக் கழகத்தில், எந்தத் தமிழர்களுக்காக என்ன தான் நடக்கிறது? தமிழுக்காகத் தொண்டு செய்யும் தங்கள் போன்றோருக்குக் கூட தமிழ்ப் பல்கலைக் கழகங்களில் நடப்பவை தெரியவில்லை என்றால் எங்குச் சென்று முட்டிக் கொண்டு அழுவது? தில்லியிலுள்ள இராசீவ் காந்தி போன்ற வடவர்களை ஏன் இழுத்துப் போட்டு இழவு காண்கின்றீர்கள்? இங்குள்ள பல்கலைக் கழகங்களில் தமிழுக்கு ஏற்றம் தராமல் அவரா வந்து அழுது புரள்கிறார்? தமிழ்நாட்டில் பத்துக்கும் மேற்பட்ட பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள் தாம் தமிழுக்கு முதல் பகைவர்கள்! இவர்களால் தான் தமிழ்நாடு மற்றோர் ஆங்கில நாடாக—இங்கிலாந்தாக—மாறி வருகிறது. இதை நாம் விரைந்து தடுத்தாகல் வேண்டும். எனவே பாவலரேறு ஐயா அவர்களே, புயலேறு என மாறி இடியுங்கள்! இடிப்பாரையில்லாதத் துணைவேந்தர்கள், இயல்பாகவே தமிழுக்குக் கெட்ட

நீரிழிவு நோய்!

மருத்துவர். எம். விக்டர்

நீரிழிவு நோய் இன்று பலரிடம் காணப்படும் ஒரு நோயாகும். 40 அகவை ஆகிவிட்டாலோ, உணவைப் பொறுத்த அளவில் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். கட்டுப்பாடில்லாமல் சாப்பிட்டு வருபவர்களுக்கும் உடற்பயிற்சி செய்யாதவர்களுக்கும் இந்நோய் மிக எளிதில் வந்து விடுகிறது. அதுவும் இந்நோயுள்ள பெற்றோர்களுக்குப் பிள்ளைகளாகப் பிறந்து விட்டால், இன்னும் அதிக எச்சரிக்கையோடு இருக்க வேண்டும்.

நம் உடலில் வயிற்றுக்குப் பின்னால், இலை போன்ற வடிவத்தில் கணையம் என்னும் ஓர் உறுப்பு இருக்கிறது. இந்தக் கணையம் கணையநீர் (இன்சுலின்) என்னும் ஒருவகைச் செரிமான நீர் சுரக்கிறது. இஃது உணவின் மூலமாகக் கிடைக்கும் சருக்கரையைச் செரிக்க உதவுகிறது. போதுமான அளவு இந்தக் கணையநீர் சுரக்காவிட்டால், உணவு வழியாகக் கிடைக்கும் சருக்கரை செரிக்கப் படாமல் நேரிடையாகக் குருதியில் கலந்து விடுகிறது. இதன் விளைவாக உடலில் பலவகையான கோளாறுகள் ஏற்படுகின்றன. இந்த விளைவையே நீரிழிவு நோய் (சருக்கரை நோய்) என்கிறோம். இதைத் தமிழ் மருத்துவ நூல்கள் மதுமேகம் என்று கூறுகிறது. பெற்றோர்களுக்கு இந் நோய் இருந்தால் பிள்ளைகளுக்கும் இது வந்து விடுகிறது.

நீரிழிவு நோயுள்ளவர்கள் நாளுக்கு நாள் உடல் மெலிந்து கொண்டே வருவார்கள். காரணம் தசைகளை வளர்க்க தேவைப் படும் இனிப்பு, இவர்களுக்குச் சிறுநீருடன் கழிந்து விடுகிறது. அதனால் இனிப்பு தன் வேலையைச் செய்ய முடியாமல் போய் விடுகிறது.

இந்நோயுள்ளவர்களுக்கு அடிக்கடி சிறுநீர் கழிப்பதும், தண்ணீர் குடிப்பதும் மற்றோர் அறிகுறி. மேலும் இவர்களுக்கு வேலை செய்ய மகிழ்ச்சியே இருக்காது. எப்பொழுதும் அசதியாகவே இருப்பார்கள். பகலில் தூங்குவார்கள். இரவில் அமைதியான, முழுமையான தூக்கம் இருக்காது. உடல் எங்கும் ஊசியால் குத்துவது போல் இருக்கும்.

ஆனால் இத்தனை அறிகுறிகளும் ஒருவரிடமே ஏற்படும் என்று தேவையில்லை. ஒருவர் அடிக்கடி சிறுநீர் கழிக்காமல் இருக்கலாம். அதனால் இவருக்கு நீரிழிவு இருக்காது என்று சொல்ல முடியாது.

19-ஆம் பக்கத் தொடர்ச்சி

வர்கள். இதனால் தமிழையும் கெடுத்து அவர்களும் அழிகிறார்கள்.

அன்பன், கணியன், புதுச்சேரி - 10.

நீரிழிவு குடும்பவழியாக வரும் நோயாகவும் இருப்பதால், இந்நோய் உள்ள பெற்றோர்களுக்குப் பிறந்த குழந்தைகள் முதலிலிருந்தே எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

ஒருவருடைய சிறுநீரில் சருக்கரை சேர்ந்து வரும்போதுதான், மருத்துவர் அவன் உடலில் சருக்கரை நோய் வந்துவிட்டது என்று கண்டுபிடிக்கிறார். அவருக்கு ஏற்பட்ட நோய்கள் குணமடையாத போதுதான், அவருடைய சிறுநீரை ஆய்வு செய்து பார்க்க வேண்டும் என்னும் எண்ணமும் ஏற்படுகிறது. சிறுநீரில் சருக்கரை வருவதற்கு 10 ஆண்டுகளுக்கு முன்னதாகவே அவருக்குச் சருக்கரை நோய் வரக்கூடிய வாய்ப்புக் கூறுகளை கண்டு பிடிக்கலாம். சருக்கரை நோய் ஒருவருக்குத் திடீரென்று வருவதில்லை. 10 அல்லது 20 ஆண்டுகளாகவே உடலில் சருக்கரை அதிகமாகிக் கொண்டே வந்து பிறகுதான் சிறுநீரில் வெளிப் படுகிறது. இதை 10 ஆண்டுகளுக்கு முன்பே அறிந்து, உணவுச் சீர்திருத்தம் செய்தும் தகுந்த மருந்துகளைக் கொடுத்தும் நோய் வராமல் தடுத்து விடலாம். மேலும் நீரிழிவுள்ள பெற்றோர்களுக்குப் பிள்ளைகளாகப் பிறந்தவர்கள் உணவுக் கட்டுப்பாட்டுடன் உடற்பயிற்சியும் அன்றாடம் செய்து வரவேண்டும். இதன்மூலந்தான் இந்நோய் வருவதைத் தள்ளிப் போடலாம்; அல்லது நோய் வராமல் தடுக்கலாம்.

'இப்போதுதான் எனக்கு நீரிழிவு இல்லையே; வந்தபின் பார்த்துக் கொள்ளலாம்'— என்னும் மனப்பான்மையை நீக்க வேண்டும். நோய் வந்தபின் குணப் படுத்துவது கடினம் என்பதை இவர்கள் உணரவேண்டும். பொதுவாகவே இந்நோய் 40 அகவைக்குப் பிறகே ஏற்படுகிறது என்றாலும், குறைந்த அகவையிலும் அஃதாவது 10, 15 அகவையிலும் ஏற்படலாம்.

பெற்றோரில் எவரேனும் ஒருவர்க்கு இந்நோய் இருந்தால், பிள்ளைகளுக்கு 60 விழுக்காடு வர வாய்ப்புள்ளது. அதே பொழுது பெற்றோர் இருவருக்குமே இந்நோய் இருக்குமானால், பிள்ளைகள் அனைவருமே இந்நோய்க்கு உள்ளாவார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் எந்த அகவையில் வரும் என்று சொல்ல முடியாது. சிலருக்கு இளம் அகவையிலேயே வந்து விடலாம்; சிலருக்கு 45 அகவைக்கு மேல் வரலாம்.

ஒருவர் பார்க்கும் அலுவலைப் பொறுத்தும் இந்நோய் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. எப்படியென்றால், ஓடியாடிச் சம்பாதிக்கக் கூடிய வேலையாக இல்லாமல், ஒரே இடத்தில் அமர்ந்து வேலை பார்ப்பதும் இதனால் உடல் எடை அதிகமாகிக் கொண்டு வருவதும், இந்நோய் வருவதற்குக் காரணமாக அமைந்து விடுகிறது. அதிக இனிப்பு சாப்பிடுதல், அதிகக் கொழுப்புப் பண்டங்கள் சாப்பிடுதல், அளவுக்கு அதிகமாக உண்ணுதல், மனக் கவலை, அலுவலில் பரபரப்பு, அலைச்சல், அளவுக்கு அதிகமாகவும் அடுத்தடுத்தும் குழந்தைகளைப் பெறுதல், இவையாவும் நீரிழிவு நோய் ஏற்படுவதற்கான சூழ்நிலைகள். இத்தகைய சூழ்நிலைகள்

ஏற்படாத வண்ணம் பார்த்துக் கொண்டால் ஓரளவுக்கு இந்நோய் வருவதைத் தள்ளிவைக்கலாம்...சிறுநீரில் வெளியேறும் சருக்கரையைக் குறைப்பதற்கு மட்டும் இந்தப் புது நாகரிக உலகத்தில் மருந்துகளும் ஊசிகளும் இருக்கின்றன. என்றாலும், அவற்றைப் பயன்படுத்துவதினால் நோய் குறைவதில்லை. சருக்கரை மட்டும் குறைகிறது. ஆனால் மற்ற தொந்தரவுகள் இருந்து கொண்டே தான் இருக்கின்றன.

நீரிழிவு நோய் ஏற்படும் வாய்ப்புள்ளவர்கள் சிறு அகவையிலிருந்தே கோதுமை, கேழ்வரகு, காய்கறி, கீரை இவற்றை உணவில் நிறைய சேர்த்துக் கொண்டு வருவது மிக்க பயனுள்ளதாக இருக்கும். அத்துடன் ஓரளவு உடற்பயிற்சி, சரியான நேரங்களில் சாப்பிடும் வழக்கம் என்று வாழ்க்கையில் சில நெறிமுறைகளை ஏற்படுத்திக் கொண்டு வர வேண்டும்.

பரம்பரையாக நீரிழிவு நோய் வருவது ஒருபுறமிருக்க, சுற்றுப்புறச் சூழ்நிலையையும் ஏற்படுத்திக் கொள்பவர்களுக்கு நீரிழிவு நோய் விரைவில் வந்துவிடுகிறது.

இந்நோய் தோன்றத் தொடங்கும் கட்டத்தில் எந்த மருத்துவ ஆய்வுகளாலும் அதைக் கண்டு பிடித்து விட முடியாது. ஆனால் ஓமியோபதி முறையில் நோயாளியை ஆய்வு செய்து வரும் போது, அவரிடம் இந்நோய் ஏற்படக் கூடிய வாய்ப்புக் கூறுகளைக் கண்டுபிடித்து விடலாம். நோய் ஏற்படக் கூடிய வாய்ப்பு உள்ளவர்களுக்குத் தகுந்த மருத்துகளை முன் கூட்டியே கொடுத்து வந்தால், இந்நோயை வரவிடாமல் தடுத்து விடலாம்.

ஆனால் நீரிழிவு நோய் வரக்கூடிய வாய்ப்புக் கூறுகள் இருந்தும், நோய் வந்தபின் பார்த்துக் கொள்ளலாம் என்று புறக்கணிப்பாக இருந்தால், பிற்காலத்தில் நோயின் கடுமையை அவர்கள் சந்திக்க வேண்டியிருக்கும். இந்நோய் உடலின் எந்தப் பகுதியையும் தாக்கித் தன்னுடைய கொடுமைத் தன்மையைக் காட்டி விடுகிறது.

சருக்கரை நோய் என்னும் இந் நீரிழிவுநோய் முற்றி விடும் போது, நிறைய சிக்கல்களை ஏற்படுத்துகிறது. ஒன்று, திடீரென்று ஏற்படுவது. இதை தீடீர்க் கோளாறு (Acute complication) என்று சொல்லுகிறார்கள். இரண்டாவது, படிப்படியாக ஓர் உறுப்பைத் தாக்கி அழிப்பது. இதுதான் நிலையான இடர்ப்பாடு. (Chronic Complication).

அரத்தத்தில் சருக்கரை அதிகமாகிக் கொண்டு வரும் போது அரத்தக் குழாயில் அடைப்பு ஏற்படுகிறது. இந்த அடைப்பு எந்த உறுப்பில் ஏற்படுகிறதோ அந்த உறுப்பு தாக்கப்படுகிறது. இது கண்ணுக்குள் ஏற்பட்டால் கண் பார்வை போகிறது. சிறுநீரகங்களில் ஏற்பட்டால், அவை செயலிழந்து போகின்றன. நெஞ்சாங்குலையில் இந்த அடைப்பு வந்தால் மாரடைப்பு ஏற்படுகிறது. கால்களுக்குச் செல்லும் அரத்தக் குழாயில் அடைப்பு ஏற்படும்

போது Diabetic gangrene என்னும் நோய் ஏற்படுகின்றது: இதனால் சில சமயங்களில் கால்களையே இழக்க வேண்டியும் நேரிடுகிறது.

மேலே சொல்லப்பட்ட சிக்கல்கள் முற்றிய நிலைக்குப் போகும் வரையில் சிலரிடம் எவ்வகை அறிகுறியும் ஏற்படாமல் கூட இருந்து விடுவதுண்டு. அதனால் நீரிழிவு நோய் உள்ளவர்கள் மிகவும் எச்சரிக்கையாய் இருப்பது இன்றியமையாதது.

ஒருவருடைய பரம்பரையில் யாருக்கேனும் சருக்கரை நோய் இருந்தால், கண்டிப்பாக உணவைப் பொறுத்த வகையிலும், உடற்பயிற்சி செய்வதிலும் அவர் கவனம் செலுத்த வேண்டும்.

நீரிழிவு நோய் வெளிப்படையாகத் தெரியும் முன்னர் அரத்தத்தில் தான் முதலில் சருக்கரை வெளிப்படும். அதற்குப் பிறகு-தான் சிறுநீரில் சருக்கரை வெளியாகும். நலமுள்ள உடலில் குருதியில் சருக்கரையின் அளவு 80 அயிர எடை (மி.கி.)- இலிருந்து 120 அ. எ. வரை இருக்கும். வயிறு வெறுமையாயிருக்கும் போது, குருதியில் சருக்கரை அளவு 180-க்கு அதிகரித்தால்தான் சிறுநீரிலும் சருக்கரை காணப்படும்.

நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு ஏற்ற உணவுகள் :

எந்தக் காய்கறி, கீரை, பயிறுவகைகளும் (பொதுவாக நிலத்திற்கு மேல் விளைவன) சிறந்தவை.

நிலத்திற்குக் கீழ் விளையும் சருக்கரைச் சாரமுள்ள கிழங்கு வகைகளை அறவே தவிர்க்க வேண்டும்.

நார்ச் சாரமுள்ள உணவு நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு மிகவும் நல்லது.

சமையலுக்கு நல்லெண்ணெயை விடக் கடலை நெய் நல்லது. அதைவிடக் கொழுப்புச் சாரம் குறைந்த சூரியகாந்தி நெய் இன்னும் நல்லது. ஏனென்றால் இது கொழுப்புச் சாரத்தை (Colastral) குருதிக் குழாயினுள் சேரச் செய்யாது.

இரண்டு வேளை அல்லது மூன்று வேளை என்று வயிறு நிறைய சாப்பிடுவதை விட கொஞ்சம் கொஞ்சமாகச் சிறிய சிறிய இடைவேளை விட்டுச் சாப்பிட்டு வருவது நல்லது.

இன்னும் குறிப்பிடக் கூடிய நல்ல உணவுப் பொருள்கள் மோர், தக்காளிச் சாறு, வெள்ளரிக்காய், எலுமிச்சைச் சாறு, பாகற்காய், வல்லாரைக் கீரை, வாழைப்பூ, வாழைத்தண்டு, வேப்பம்பூ, ஈச்சா(புதினா)க் கீரை,— இவற்றை உணவில் அடிக்கடி சேர்த்துக் கொண்டு வருவது மிகவும் சிறந்தது.

ஒரு கட்டிடத்திற்கு அடித்தளம் (Foundation) எவ்வளவு முகாமையானதோ, அவ்வளவு முகாமை வாய்ந்தது உணவு. எனவே நீரிழிவு நோயைக் குணப் படுத்தவோ, கட்டுப்படுத்தவோ தகுந்த உணவே இன்றியமையாதது.

உணவுக்கு அடுத்தபடியாக முகாமை வாய்ந்தது உடற் பயிற்சி. உடற்பயிற்சி செய்வதால், குருதியில் அதிகமாயுள்ள இனிப்புச் சாரம் குறைகிறது. மருந்துகளைச் சாப்பிட்டும் இனி, இனிப்புச் சாரத்தைக் குறைக்கலாம் என்றாலும், மருந்தில்லாமல் இயற்கையான முறையிலேயே சருக்கரையைக் குறைப்பதுதான் சிறந்தது.

ஆகவே, உணவுக்கும், உடற்பயிற்சிக்கும் அடுத்தவைதாம் மருந்துகள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். உடற் பயிற்சி செய்ய முடியாத அகவை முதிர்ந்தவர்கள் கொஞ்சம் முடிந்த மட்டும் வேகமாகச் சிறிது தூரம் நடந்து செல்வது நல்லது.

உடற்பயிற்சி எவ்வாறு இனிப்பைக் குறைக்கிறது என்று உங்களுக்கு ஐயம் எழலாம்.

இனிப்பு என்பது உடலுக்குத் தேவையான ஒரு சாரம். எடுத்துக் காட்டாக இயங்கிக்குக் கன்னெய் (பெட்ரோல்) எப்படி ஆற்றல் கொடுக்கிறதோ, அப்படித்தான் சருக்கரைச் சாரமும் உடல் இயங்குவதற்கு ஆற்றலைக் கொடுக்கிறது. ஆனால் கன்னெய் எரிந்து ஆற்றலாக மாறாமல் அப்படியே பொறிக்குப் போய் விட்டால், இயங்கிக்கு ஆற்றல் கிடைக்காது. அதுபோலதான் சருக்கரையும் ஆற்றலாக மாறாமல் நேரடியாகக் குருதியில் கலந்து விட்டால் உடல் இயங்க மறுக்கிறது. உடல் ஆற்றலற்றுச் சோர்வடைந்து போகிறது. காரணம் சருக்கரை நேரடியாகக் குருதியில் கலந்து விடுகிறது. இந்நிலை சிறுநீர் வழியாகவும் நமக்குத் தெரிய வருகிறது. இதைத் தான் சருக்கரை நோய் அல்லது நீரிழிவு நோய் என்கிறோம். இயங்கி, கன்னெய்யின்—ஆற்றலைப் பயன்படுத்தி ஓட ஓடக் கன்னெய்யின் அளவு குறைந்து வருவது போல, நம்முடைய உடலும் ஓடியாடி வேலை செய்யச் செய்ய, சருக்கரையின் அளவும் குறைந்து வருகிறது. குருதியில் சருக்கரை அளவும் அதிகமாகக் குறைந்து விட்டாலும் கெடுதல்தான். அந்த நிலைக்கான அறிகுறிகள் : 1. அளவுக்கு மீறிய பசி. 2. மார்புப் படபடப்பு. 3. கை, கால் நடுக்கம். 4. அதிக வெயர்வை 5. மயக்கம்.

இத்தகைய குறிகள், சரியான நேரத்திற்கு உணவு உண்ணாமல் இருந்தாலும் ஏற்படலாம். அப்படிப் பட்டவர்கள் அந்நிலை ஏற்படும் பொழுது உடனடியாக உணவை உட்கொள்ள வேண்டும். அதற்குப் பிறகும் இந்த அறிகுறிகள் அவர்களுக்கு மறையவில்லை என்றால் சிறிது சருக்கரை அல்லது பழச்சருக்கரை (குளுகோசு) சாப்பிடலாம்.

நாம் உணவு வழியாகவோ நேரடியாகவோ உண்ணும் சருக்கரையை உடலுக்கு வேண்டிய ஆற்றலாக மாற்ற உதவுவது, நம் உடலில் உள்ள கணையம் (Pancreas) என்னும் சுரப்பியிலிருந்து சுரக்கும் கணைய (இன்சுலின்) நீரே! இந்நீர்தான் சருக்கரையைப் பக்குவப் படுத்தப் பட்ட பழச் சருக்கரையாக (குளு

கோசாக) மாற்றிக்குருதியில் கலக்கவிட, அ'து ஆற்றலாக மாறி, உடல் இயங்க உதவுகிறது.

எனவே, அக் கணையம் என்னும் சுரப்பியிலிருந்து போதுமான கணைய நீர் (இன்சுலின்) சுரக்காவிடில், உணவுச் சருக்கரைப் பழச் சருக்கரையாக மாற்றப்படாமலேயே குருதியில் கலந்து விடு கிறது. இதனால் உடல் ஆற்றலைப் பெறாமல் போய்விடுகிறது. இந்நிலையைத்தான் நீரிழிவு அல்லது சருக்கரை நோய்நிலை என் கிறோம். எனவே இந்நோய் ஏற்பட்டவர்கள் கணையநீரை அஃ தாவது இன்சுலினை ஊசி வழியாகவோ மாத்திரை வழியாகவோ குருதியில் சேரச் செய்து கொள்ளுகின்றனர். இருந்தாலும் இம் மருந்துகளையே தொடர்ந்து பயன்படுத்துவது நல்ல பயன்களை விளைவிக்காது.

சிறுநீரில் வெளியாகும் சருக்கரையின் அளவை நாமே ஆய்வு செய்து கண்டுபிடிப்பதன் வழி, நீரிழிவு நோயின் கடுமையை நாம் உணர்ந்து கொள்ளலாம். இவ்வாய்வு செய்ய நமக்குத் தேவை யான பொருள்கள் : 1. ஆய்வுக்குழாய் (Test tube). 2. ஆய்வுக் குழாயைப் பிடித்துக் கொள்ளப் பயன்படும் இடுக்கி. (Test tube holder). 3. 'பெனடிக்ட்' மருந்துக் கலவை. (Benedict solution) —இது மருந்துக் கடைகளில் கிடைக்கும். 4. எரி சாராய விளக்கு. (Sprit Lamp) அல்லது வளி (Gas) அடுப்பு.

சிறுநீர் ஆய்வு முறையும் நோய் அளவு கண்டு பிடிக்கும் வகையும் :

ஆய்வுக் குழாயில் 'corning' என்னும் பெயர் பொறிக்கப் பெற்றுள்ளதாக வாங்கிக் கொள்வது நல்லது. ஏனெனில் இந்தக் குழாய் அதிகச் சூடு தாங்கக் கூடியது.

இந்தக் குழாயை அதற்குரிய இடுக்கியில் பிடித்துக் கொண்டு 'பெனடிக்ட்' கலவையை 5 cc விடவும். இதைச் சாராய விளக் கில் காய்ச்சவும். காய்ச்சும் போது ஆய்வுக் குழாயின் வாய் உங் களின் முகத்துக்கு நேராகப் பிடிக்காமல், கொஞ்சம் சாய்த்துப் பிடித்துக் காய்ச்சவும். கலவை கொதி வந்தவுடன், ஏற்கனவே பிடிக்கப் பெற்ற நோயாளியின் சிறுநீரில் 8 சொட்டுகளை (0.5 cc) ஆய்வுக் குழாயில் உள்ள கொதித்த கலவையில் விடவும். மீண்டும் ஓரிரு நிமையம் அதைக் காய்ச்சவும். காய்ச்சும் போது ஆய்வுக் குழாயை இலேசாக ஆட்டுவது நல்லது. இல்லாமற் போனால், கொதிக்கும் கலவை நம் மீது தெறித்து விடக் கூடும்.

நோய் அளவு : கொதித்த நீர் முன்னுள்ள கலவை நீரின் நிறத்தைப் போல் நீல நிறமாகவே இருந்தால் சிறுநீரில் சருக்கரை இல்லை என்று தெரிந்து கொள்ளலாம்.

நீர் இலேசான பச்சை நிறமாக இருப்பின் சருக்கரை அளவு + (கொஞ்சம்) என்க.

அழுத்தமான பச்சை நிறம் சிறிது கூடுதலாக ++ நோயுள் ளது என்னும் அடையாளம்.

நாடகம் : [தொடர்-20

கொய்யாக்கனி

நாடக ஆக்கம் : அதியமான்

(பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்களின் பாவியம்.)

காட்சி—உசு

உறுப்பினர்: 1. வள்ளி, 2. கிழவர், 3. மருக்கொழுந்து 4. சிங்கன்.

இடம் : 1. சாலை, 2. கிழவர் வீடு.

மரு. வள் : (சாலை வழி நடந்து கொண்டு...)

வள் : மருக்கொழுந்து பேரிடரிலிருந்து தப்பினேன். ஏன், மருக்கொழுந்து கருப்பனனை வஞ்சந் தீர்க்க, அவனுக்கு இரையாக நானு அகப்பட வேண்டும்? ஆமாம்! மருக்கொழுந்து, என்னை ஏன் அப்படி ஏமாற்றினுய்?

மரு.கொழு : நான் இவ்வாறு செய்யா விட்டால், அவனை எவரும் ஒன்றுஞ் செய்ய முடியாது. கண்ணையனின் கொலை வழக்கிலும் தப்பி விடுவான், அந்தக் கரியன். மேலும் பல பெண்களை அழித்து விடுவான். அதனுல் இதற்குத் தகுதியுடையவள் நீ என்பதை தெரிந்து, அறிந்து தான், இத் திட்டத்தைப் போட்டேன்.

வள் : அவனைப் பிடித்துக் கொடுக்க நான் தானு அகப்பட்டேன் இதுவாவழி? அவனிடம் சிக்கிச் சிக்கித் தப்பித்தவள் நான். வேறு வழி இல்லையா?

மரு.கொழு : இல்லையம்மா; இல்லை! கேள்! எப்போதும் உன் நினைப்பிலேயே இருந்தான், அந்தக் கருப்பனன்; உன்

முன் பக்கத் தொடர்ச்சி

மெல்லிய பழுப்பு (செம்மஞ்சள்) நிறம் +++. நோய் மூவளவு என்பதைக் காட்டும்.

அழுத்தமான சிவப்பு - நோய் நாலளவு ++++ என்பதை உணர்த்தும். இது கடுமை நிலை.

சிவப்பு மிகக் கடுமையாக இருந்தால் நோய் மிக முற்றிய நிலை என்றும், நோயாளி மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

நீரிழிவு நோயாளிகள் சிலரிடம் அதிகாலையில் கழிக்கும் சிறுநீரில் சருக்கரை இருப்பதில்லை, எனவே சாப்பிட்டு இரண்டு மணி நேரம் சென்று சிறுநீரை ஆய்வு செய்து பார்ப்பது நல்லது. சிலர்க்குச் சருக்கரை நோய் இருந்தாலும் கூட சிறுநீரில் சருக்கரையே இருக்காது. அக்கால் குருதி ஆய்வு செய்தே கண்டு பிடிக்க வேண்டும்.

நன்றி: 'ஆனிமன்' (மருத்துவ இதழ்)
மார்ச்சு, ஏப்பிரல், மே—'87

அழகைச் சுவைக்கும் எண்ணத்தில் தன் கையைச் சப்புவான்; கனவிலும் உன் பெயரைக் கூறிக் கத்துவான். இவற்றையெல்லாம் நான் நேரில் கண்டவள். அதனால் உன் மூலமே இச்செயலை வெல்ல முடியும் என்று எண்ணியே உன்னைப் பயன் படுத்தும் முடிவிற்கு வந்தேன், செய்தும் முடித்து விட்டேன்.

வள் : நான் செத்திருந்தால்...

மரு.கொழு : வள்ளி ! அந்த வெறியன் உன்னைச் சாக விட மாட்டான். அது எனக்குத் தெரியும் ; அதனாலேயே கெண்டையைப் போட்டு வராலைப் பிடிக்கத் திட்டம் வகுத்தேன். வள்ளி கேள் ! உரமும் அறமும் கொண்ட நெஞ்சைச் சூது எதுவும் செய்திட முடியாது. உன் உறுதியால் அவனை வெல்லுவாய் என்பது எனக்குத் தெரியும். சரி ; சரி. விரைவாக நட, உன் தாத்தாவை விரைவாகச் சென்று காண வேண்டும்.

வள் : ஆமாம் ; ஆமாம். தாத்தா எப்படி இருக்கிறாரோ? (குடிலுக்குள் போய்) ஐயோ ; தாத்தாவைக் காணவில்லையே ! (அங்கும் இங்கும் ஓடிப் பார்க்கிறாள்.) தாத்தா என்னைக் காணவில்லை என்றதும் உள்ளம் உடைந்திருப்பார். நான் பெண்ணாகப் பிறந்ததால் என் தாத்தாவிற்கு நிமையம் தவறாமல் கவலை. உள்ளக் கலக்கம். (தன்னைக் கையால் தொட்டு) இந்தப் பெண்ணால் அவரடைந்த துயர் கொஞ்சமா? அந்தக் கரியன் கருப்பனால் நான் பட்ட துன்பத்தை அவர் எண்ணி எண்ணிக் கண்ணீர் வடிப்பார். பெண்ணைப் பெருமைப் படுத்த பெண்ணுக்கு எங்கு பார்த்தாலும் அம்மன் கோவில்கள் ; ஆனால் பெண்கள் படும் பாடோ ? முடிவில்லாத் துன்பம்.

மரு.கொழு : இந்த நாட்டுப் புலவர்கள் பெண்ணை நம்பாதே என்று பாடி வைத்ததின் விளைவு நாம் நம்பிக்கையற்ற பொருளாக, அடிமைகளாக வாழ்கிறோம். என்னைக் கருப்பனன் கைவிட்டானே, எவனாவது ஏனென்று கேட்கிறானா ?

வள் : இவள் ஏன் அவனிடம் அகப்பட்டாள் என்று கேட்பானேயன்றி, அவன் ஏனிவளைச் சீரழித்தான் என்று கேட்க மாட்டான்.

மரு.கொழு : வள்ளி ; ஒரு பெண்ணைக் குற்றவாளியாக்குவதும் ஆண்களே; அந்தக் குற்றத்தை ஆய்ந்து முடிவு கூறுவதும் ஆண்களே; பெண்ணுக்கு ஞாயம் எப்படிக் கிடைக்கும் ?

வள் : அதனால் தான் பெண்கள் கற்று நடுவர்களாக வர வேண்டும் என்கிறேன்.

மரு.கொழு : அப்படி வந்து விட்டால் உன் தாத்தாவிற்கு நெஞ்சத் துணிவு வந்து விடும், அல்லவா ?

வள் : இப்பவும் துணிவுள்ளவர்தாம் ; ஆனாலும் என்னைக்

காணுவிட்டால், இந்தக் குழுகாயச் சூழலைக் கண்டே கலங்குவார். அதனால்தான், மருக்கொழுந்து எனக்குக் கவலை. என்னைக் காணாமல் எங்கெல்லாம் தேடி அலைகிறாரோ? அல்லது உயிரைத்தான் போக்கிக் கொண்டாரோ? ஐயோ, அப்படியானால் என்வாழ்வு இடி விழுந்த மரம் போல ஆகிவிடும். (அழுகிறாள்)

மரு.கொழு : (வள்ளியின் தோளைப் பிடித்து) வள்ளி கவலைப் படாதே. கண்ணீர் விடுவதா? உன் தாத்தா எங்கேயாவது போயிருப்பார். கலங்காதே! வருவார். நடக்காத ஒன்றை நடந்திருக்கும் எனக் கற்பனை செய்து கொண்டு குழம்புவது வீரமற்ற செயல். எதுவரினும் சந்திப்பது தான் மறம்.

வள் : சரி. நடப்பது நடந்தாகட்டும். நீ இரு. நான் தோட்டத்துப் பக்கம் சென்று வருகிறேன் (போய் விடுகிறாள்)

கிழ : (கதவைத்தட்டி) யாரம்மா உள்ளே?

மரு.கொழு : யார், தாத்தாவா (கதவைத் திறக்கிறாள்)

கிழ : (உள்ளே வந்து) நீ யார்? வள்ளி இல்லையா?

மரு.கொழு : இருங்கள் தாத்தா; நான் அழைத்து வருகிறேன். (தோட்டத்துப் பக்கஞ் சென்று) வள்ளி, வள்ளி.

வள் : என்ன? மருக்கொழுந்து. தாத்தாவா?

மரு.கொழு : ஆமாம். உன் தாத்தா வந்து விட்டார்.

வள் : தாத்தா வந்து விட்டாரா? (ஓடிவந்து, கிழவர் கைகளைப் பிடித்து) தாத்தா, என் உயிர் இப்போதுதான் வந்தது. தாத்தா உங்களைக் காணாமல் தவியாய்த் தவித்தேன்.

கிழ : அது சரி. நீ எங்கேயம்மா போயிருந்தாய்?

வள் : சொல்லுகிறேன் தாத்தா. தாத்தா கால்கள் அழுக்காக இருக்கின்றனவே (வீட்டுக்குள் ஓடித் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்து) கால்களைத் தூய்மையாக்கிக் கொண்டு வாருங்கள்.

கிழ : (மருக்கொழுந்தைச் சுட்டி) இது யாரம்மா?

வள் ; முதலில் போய் கால்களைத் தூய்மையாக்குங்கள். சொல்லுகிறேன்.

கிழ : (தண்ணீரை வாங்கிக் கொண்டு போகிறார்)

வள் : மருக்கொழுந்து திண்ணையில் அமர்; தாத்தா வரட்டும்.

கிழ : (வருகிறார்)

வள் : (தாத்தாவை நோக்கி) இப்படித் திண்ணையில் உட்காருங்கள்.

கிழ : (திண்ணையில் அமருகிறார்) வள்ளி (நின்று கொண்டிருந்த மருக்கொழுந்தைக் காட்டி) இந்தப் பெண் யாரோ? (அவளைச் சுட்டி இடத்தைக் காட்டி) உட்கார்.

வள் : தாத்தா, இவளுடைய வரலாறும் கருப்பனேடு தொடர்பு உடையதுதான். இவள் பெயர் மருக்கொழுந்து.

கிழ : அப்படியா ! மருக்கொழுந்து உன் முகத்தில் வாட்டம் தென் படுகிறதே. என்ன கவலே உனக்கு? ஏற்பட்ட இடர்ப் பாடுதான் என்னவோ ?

மரு.கொழு : தாத்தா, இந்தநாட்டில் பெண்ணுய்ப் பிறந்தாலே இடர்தான்.

கிழ : பொதுவாக அப்படித்தான். உனக்கு என்ன தொல்லே ?

மரு.கொழு : ஒரு பெண்ணின் இரண்டகச் செயலால் இந்த ஊர்க் கருப்பனனிடம் மாட்டிக் கொண்டேன்.

கிழ : ஐயோ ?

மரு.கொழு : என்னேக் கெடுத்தான்; கை விட்டு விட்டு, என்னேத் தெருவில் விட்டு விட்டான்.

கிழ : உன்னேப் பெற்றவர், உடன் பிறந்தவர் எங்கே இருக்கி ருர்கள் ?

மரு.கொழு : அனேவரும் மண்ணுக்குள் போய்விட்டார்கள்

கிழ : ஐயோ ! இரக்கம்!

மரு.கொழு : ஆனல், கரியன் கருப்பனன் வாழ்ந்து கொண்டி ருக்கிருன்.

வள் : இனி அவன் எப்படி வாழ்வான் ? தொலேந்தான்; நீ தான் நல்ல திட்டம் போட்டு அவனே மாட்டி வைத்து விட்டாயே; இனி அவன் ஞாயத்திலிருந்து தப்ப முடியாது.

கிழ : கருப்பனனு தொலேந்தான் ! எப்படி ?

வள் : மருக்கொழுந்து யாவற்றையும் சொல்லுவாள்.

கிழ : அப்படியானல், மருக் கொழுந்து சொல் கேட்கிறேன்.

மரு.கொழு : தாத்தா, என் அக்காளும் அவள் குடும்பமும் வறு மைக்கு இரையாகிக் கொண்டிருக்கும் போது, நான் கருப் பனனல் கற்பழிக்கப் பட்டேன். என் அக்காள் குடும்பத் தினர் வறுமைக்கு இரையாகி மாண்டனர். அந்தக் கரியனி டம் என்னே மனேவியாக ஏற்றுக் கொண்டு வாழ அவனு டைய கால்களில் விழுந்து கெஞ்சினேன்; அவனே வேலேக்கு ஒரு பெண்ணேக் கெடுத்து வாழ்ந்தான். அந்தச்சுவை கண்ட வன், என்னே ஏறெடுத்துப் பார்ப்பதே கிடையாது; உண விற்கும் கொடுப்பது இல்லே. ஊர் பெரியோர்களின் துணே கொண்டு என்னே மணஞ் செய்து வாழ வைத்தேன்; அவன் செய்யும் தீச் செயல்களேக் காணுதவள் போல இடையூறு செய்வதில்லே. அவனே பல பெண்களேத் துரத்தி மதயானே போல வெறியால் அலேந்தான். நேற்று எப்படியோ ? என் வீட்டிற்கு வந்தான். இரவு தங்கி வள்ளியின் மீது உள்ள அவன் கொண்ட வெறியைப் பற்றியும், அதற்காகக் கண் ணேயனேக் கொலே செய்த செய்தியையும் கூறினன் ; வள்

ளியை எப்படியும் அடைவேன்-என்றும் கூறினன். இவன் வாழ்ந்தால் இன்னும் பல பெண்களைக் கெடுப்பான் என்று எண்ணி, அவனை இந்த வழக்கில் தப்ப விடாமல், ஞாயம் மறைந்து விடாமல் இருக்கச் செய்து விட்டேன். தாத்தா' மீதியை வள்ளி உரைப்பாள்.

வள் : ஆமாம், தாத்தா. மருக்கொழுந்தின் திட்டத்திற்கு என்னைப் பயன் படுத்தினள். அகப்பட்டுக் கொண்டான். நாளை நாங்கள் மன்றுக்குப் போகிறோம்.

சிங் : (வருகிறன்)

வள் : (எழுந்து நிற்கிறள்)

மரு.கொழு : (வள்ளியைத் தொடர்ந்து எழுந்து நிற்கிறள்)

கிழ : (தெரியாதது போல நடித்து) யாரிவன். வள்ளி எதற்காக எழுந்து நிற்கிறய்? என்னவென்று புரியவில்லை. மருக்கொழுந்தும் எழுந்து நிற்கிறள். பெண்கள் தனியாக இருக்கும் இடத்திற்குத் தேடி இவனேன் வருகிறன்?

வள் : தாத்தா இவர்தான் என்னுடைய......

கிழ : (இடைமறித்து) என்ன !? என்னுடைய (சிங்களைநோக்கி) ஏய் இங்கே ஏன் வந்தாய்?

சிங் : (கிழவருடைய நடிப்பைப் புரிந்து கொண்டு) நானு? நான்......

கிழ : (சட்டென்று) அவள் என்னடா என்றல் 'என்னுடைய' என்கிறள்; நீ என்னடா என்றல்' நான்' என்கிறய், இ'து என்ன வீடா? அல்லது எவனும் வரலாம் என்ற மடமா?

வள் : தாத்தா இவரு......

கிழ : (சட்டென்று) என்ன? இவரு; அவரு. தவறு, தவறு. எவரும் இங்கு வரக் கூடாது. காலம் கெட்டுப் போய்க் கிடக்கிறது. பெண்ணோடு ஒருவன் பேசினல் போதும்; ஓடி ஒரு கூட்டத்தையே கூட்டிக் காட்டுவான். தண்ணீர்க் குழாயில் தண்ணீர் எடுப்பதைக் கூட மறந்து விட்டு யாரிடமும் சொல்லாதே, யாரிடமுஞ் சொல்லாதே என்று எல்லோரிடமும் சொல்லி விடுவார்கள், இந்த நாட்டுப் பெண்கள் (சிங்களை நோக்கி) ஏய் வெளியே போ.

வள் : தாத்தா சினக்க வேண்டாம். இவர்தாம் என்னை ஆளப் போகிறவர்.

கிழ : ஆளப் போகிறவனே, உன்னைக் கட்டிக் கொண்டு ஓடப் போகிறவனே? பிறகு தெரியும் இவன் திறமை. சரி. (சிங்களை நோக்கி) உன் பெயரென்ன?

கிங் : என் பெயர் சிங்கன்.

கிழ : காட்டுப்பக்கம் அலைய வேண்டியவனெல்லாம் வீட்டுப் பக்கம் அலைகிறன். (வள்ளியை நோக்கி) வள்ளி இவன் யாராக இருந்தாலும், இவனை விட அழகுடையவன் கண்ணையனே அவனைத் தள்ளி விட்டாலும், என் மகன் ஒருவனிருக்கிறன். அவனிருக்க இவன் வேண்டாம், போகச் சொல்.

மரு.கொழு : தாத்தா. எனக்கோ நீங்கள் பேசுவது வியப்பாக உள்ளது. வள்ளியும் சிங்கனும் உடலும் நிழலும் போல இன்று வரை இருக்கிறார்கள். இ'து உங்களுக்குத் தெரியும் என்றிருந்தேன். நீங்கள் இப்போது உடும்புப்பிடியாக சிங்கனை விரட்டுவது நடிப்பா அல்லது நடப்பா எனத் தெரியவில்லை.

கிழ : யாரைக் கேட்டு இவனை இவள் காதலித்தாள். எறும்புப் புற்றில் பாம்பு குடியிருப்பது போல, என் மகனுடைய செல் வத்தை இவன் யார் நுகர ?

மரு.கொழு : தாத்தா, காதலுக்குக் காவலே கிடையாது. அப் படியிருக்க யாரிடமும் இதைக் கேட்க முடியாது.

கிழ : உனக்கென்ன தெரியும் ? விளக்கெண்ணெய். காதலாவது கத்தரிக்காயாவது. ஏ, சிங்கா இனி இங்கு நீ நிற்பது சரி யில்லை. தட்டு வண்டியை.

சிங் : நான் போகத்தான் வேண்டுமா ?

கிழ : ஆம். போய்விடு.

மரு.கொழு : தாத்தா, குயிலின் குரலும், மயிலின் அழகும் போலச் சேர்ந்திருந்தார்கள்.

கிழ : சேர்வார்கள், சேர்வார்கள். ஏய் புறப்படு !

சிங் : (போவது போல நடிக்கிறான்)

வள் : தாத்தா, நான் கண்ணீர் விட்டுக் கலங்கவா, என் அன்னையைப் போல என்னைக் காத்து வளர்த்தீர்கள் ? இப்போது என் உயிரைப் பிரிக்க வேண்டாம், தாத்தா ! என் உயிரைக் காக்க வேண்டும். அல்லது என் உடல் இருக்கும், உயிர் இருக்காது.

சிங் : (திரும்பிப் பார்க்கிறான்)

வள் : (சாய்கிறாள்)

சிங் ; (தாங்கிப் பிடிக்கிறான். அமர்ந்து தன் மடியில் சாய்த்து வைக்கிறான்.)

கிழ : மருக்கொழுந்து ஓடிப் போய்த் தண்ணீர் கொண்டுவா.

மரு.கொழு : (ஓடுகிறாள். தண்ணீர் கொண்டு வந்து வள்ளியின் முகத்தில் தெளிக்கிறாள்.)

கிழ ; தூய்மையான காதல்! (வள்ளியைத் தட்டி) வள்ளி எழுந் திரு.

வள் : (கண்ணைத் திறந்து) அவர் எங்கே ?

கிழ : அவனுடைய மடியில் தான் சாய்ந்திருக்கிறாய், வள்ளி ! சிங் கன் போகமாட்டான். இவனே என் மகன். இரண்டு பேருமே என் செல்வங்கள்தாம். வேடிக்கையாக நடித்தோம். கவலைப்படாதே எழுந்து அமர்.

மரு.கொழு : அடேடே ! வள்ளி நீ திருடியதாய் நினைத்தது உன் னுடையது தானா ?

கிழ : ஆமாம், வள்ளி திருடிய தேன், வள்ளிக் குரியது தான்.

வள் : போதுமே ! போகச்சொன்னதும் போனவர்தாமே !

சிங் : நான் எங்கே போனேன் ? போவது போல நடித்தேன்.
வள் : நடித்தது போல, நடந்தால்... ?
சிங் : நடிப்பைக் கண்டு எல்லோரும் ஏமாற மாட்டார்கள். வள்ளி நீயும் ஏமாறி விடாதே.

மரு.கொழு : தாத்தா, ஏம்மா வள்ளி! நான் வீட்டிற்குப் போய் இரவில் வந்து விடுகிறேன்.

வள் : (தலையை அசைக்கிறாள்.)
மரு.கொழு : (போய் விடுகிறாள்.)

கிழ : சிங்கா, உன் சொத்தை உன்னிடம் ஒப்படைத்து விட்டேன். நான் உறங்குவதற்குப் போகிறேன். (படுத்துக் கொள்கிறார்)

சிங்-வள் : (தோட்டத்திற்குள் போகிறார்கள்)
வள் : (சிங்கனின் தோளைப் பற்றிக் கொள்கிறாள்)

(பாட்டு)

மாலைப் பொழுதிருக்க ! மஞ்சள் வெயில் சூழ்ந்திருக்கத்
தோளைப் பிடிப்பதென்னவோ ! — ஒளி
வேளை மறப்பதென்னவோ ?

வள் : தோழி யுடனிருக்கத் தொல்லை வந்து காத்திருக்க
நாழி பொறுக்கு திலையோ ? — ஒளி
ஆழி மறைவதிலையோ !

சிங் : திறந்த வெயிலிருக்கத் தந்தையும் நம் மோடிருக்க
பறந்து வருவதென்னவோ ? — நிலை
மறந்த வகைதா னென்னவோ ?

வள் : மாலை யொழிந்து விடும் ; மற்றுமிருள் போர்த்து விடும் ;
காலை மலரும் வரையே —இரு
கைக்குள் அடக்க மல்லவோ?

(இருவரும் கூடி இருக்கின்றனர்)

காட்சி-௨௭

உறுப்பினர் : 1 கிழவர், 2 சிங்கன், 3 வள்ளி 4 மருக்கொழுந்து
இடம் : கிழவர் வீடு
நிலை : காலையில் தன்னிரக்கம் கொண்டு மருக்கொழுந்து மலைதல்.

வள் : (மருக்கொழுந்தை நோக்கி) மருக்கொழுந்தே, உன் முகம் நெருப்பில் வாட்டிய தண்டு போலுள்ளதே! கவலை என்ன? சே ! தமிழ் நாட்டுச் செல்வங்களை யெல்லாம் பறி கொடுத்த தமிழன் போல, தேய்ந்து இருக்கிறது உன் முகம் ஏன் ?

மரு.கொழு : என் நிலையை எண்ணித்தான் கவலை.
வள் : தளிர்த்த காதலைக் காத்த நீ துன்பங் கொள்ள நான் ஒப்பேன்.

மரு.கொழு : எரிந்த சாம்பலைக் கிளறுதே. அதிலிருந்து தீப் பொறி தான் பறக்கும், விடு. போ. (தொடரும்.)

○ : 1235 : அன்பு ஐயாவுக்கு, வணக்கம். சென்ற கிழமை ஏமாற்றமான மனநிலையில் ஒரு மடல் எழுதியிருந்தேன். ஆம் தமிழ் மண்ணில் — பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்களால், தமிழ் வஞ்சிக்கப் படுவதை எண்ணி அம்மடல் வரையப் பெற்றது. தமிழ் மொழியானது, தமிழ் நாட்டிலேயே பயிற்று மொழியாக வும் பாடமொழியாகவும் அமையாமல் இருக்கப் பெருந்தடையாக இருப்பவர்கள், தமிழகப் பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர் களே ! அவர்கள் தமிழுக்கு எதிராகவே எண்ணுகிறார்கள் ! தமி ழுக்கே இரண்ட(துரோ)கம் செய்கின்றனர் ! தமிழ் மண்ணில் சிறார் பள்ளிகள் முதல் பல்கலைக் கழகங்களின் உயர்கல்வி வரை யில் ஆங்கிலமே மிகக் கொடிய ஆட்சிச் செய்கிறது ! இதை நாம் விரைந்து தடுத்தாகல் வேண்டும் !

இந்நிலை ஒரு புறமிருக்க, இலங்கையில் தமிழின விடுதலை முழக்கம் இரவோடு இரவாக இந்திய—சிங்கள அரசால் ஒடுக்கப்பட ஒப்பந்தம் கையெழுத்தாகி உதை பட்டு ஓடி வந்துள்ளது ! கடந்த 40, 50 ஆண்டுகளாக 40, 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழினத்தவர்கள் படுகொலை செய் யப் பட்டிருக்கிறார்கள் என்பதை உலக வரலாறே மறுக்க முடி யாது ! இந்நிலையில் (தமிழ் ஈழம் விடுதலை பெறும் நிலையில்) 'நீங் கள் (சிங்களர்களும் தமிழர்களும்) இருவரும் ஒற்றுமையாய் இருக் கும் படி நாங்கள் (இந்தியா) பார்த்துக் கொள்ளுகிறோம்' என்றால் எப்படி ? எ'து எப்படியாயினும்—இந்தியத் தலைமை அமைச் சரையே சிங்களவெறியன் அடித்தனுப்பினான் என்றால்—சிங்கள செயவர்த்தன—பண்டார நாயக அரசுகள் எந்த அளவிற்குத் தமி ழர்களை அடித்து இனப்படுகொலை செய்திருக்கும் என்பதை இரா சிவ் காந்தி உணர வேண்டும் !

தமிழர்களுக்கு இலங்கையில் பாதுகாப்பு இல்லை என்றால் தமிழ்நாட்டிலும் இல்லை என்றாகும் ! தமிழர்கள் தங்கள் இனத்தை உலகில் காப்பாற்றிக் கொள்ள—தனித் தமிழ்நாட்டைத் தவிர வேறு வழியே இல்லை. தமிழ்நாடும்—தமிழ் ஈழ நாடும் விடுதலை பெற வேண்டியது காலக் கட்டாயமாகும் ! உலக அரங்கில் தமி ழினத்திற்குத் தனிநாடு வேண்டும் ! தமிழின விடுதலையை ஓங்கி முழக்குங்கள், அன்பன், —கணியன், புதுவை.

○ : 1236 : பேரன்பு கெழுமிய ஐயா, வணக்கம். முசிறி அமலாப் பள்ளியில் 'இலக்கியத்தின் பரிமாணம்' எனும் தலைப் பில் தாங்கள் ஆற்றிய உரை மிக அருமையென அப்பள்ளி ஆசிரி யைகள் வியந்து பாராட்டினர். 'நம் அன்பர்கள் கல்லூரியில் பாடமாக்கப்பட வேண்டிய செய்திகளைத் தெளிவாகவும், ஆழ்ந்த கருத்துகளுடனும் எளிமையாக எடுத்துரைத்தார்' எனப் பாராட் டினர். 'அகர முதல' எனத் தொடங்கும் திருக்குறளுக்குத் தாங் கள் அளித்த விளக்க வுரையினைக் கேட்டு முசிறித் தமிழ்க் கழகச் செயலர் புலவர் மு. வீரேசுவரனும், பொருளர் அண்ணாமலையும் 'இவ்வளவு நுட்பமான பொருள் அக்குறளில் உள்ள செய்தியினை இதுகாறும் எவரும் கூறவில்லையே' என வியந்தனர். புலவர் சேந்த மாங்குடியார், முசிறித் தமிழ்க்கழகத்தின் திருவள்ளுவர் விழா விற்குத் தங்களை வருவித்துத் திருக்குறளின் மெய்ப் பொருளை இப் பகுதி மக்கள் கேட்டுப் பயன்பெறச் செய்வோம் எனக் கூறினார். மற்றும் சுற்றியுள்ள கம்மங்களிலும் ஐயாவின் கருத்துப் பரவ ஆவன செய்வதாகக் கூறினார். தாங்கள் முசிறிக்கு வருகை தந்து அருஞ் சொற்பொழிவு இரண்டு ஆற்றியமைக்கு என் உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.—த. கரிகாலன், முசிறி.

○ : 1237 : பேரன்புடையீர், வணக்கம். ஐயா, நான் நீண்ட ஆண்டுகளாக உங்களுடைய வெளியீடான தென்மொழி, தமிழ்ச்

சிட்டு போன்ற தமிழுக்குத் தொண்டு செய்து, தூய தமிழ்ப் பணியாற்றி வரும் ஏடுகளை ஆண்டுக் கட்டணம் கட்டி வாங்கிப் படித்து வருகிறேன்.

நிற்க, இரண்டு மூன்று திங்களுக்குமேல் ஆகிவிட்டது, எனக்கு இதழ்கள் வந்து. எனவே, இதற்குரிய கரணியம் எனக்குத் தெரியவில்லை. அஞ்சலார் தவறு, அல்லது அங்கே தலைமையிடத்தில் ஏதாவது சிக்கலா என்று எனக்குப் புரியவில்லை. இரு இதழ்களும் வராமல் இருப்பது எனக்கு மிகுந்த துன்பம் தரக் கூடியதாகவும், கையைக் கட்டிப் போட்டது போலவும் இருக்கிறது. இதழ்கள் திங்கள் தோறும் என் கைக்குக் கிடைக்கும் போது என் முக மலர்ச்சியை இன்னதென்று கூற முடியாது.

நிற்க, நாம் வாழ்ந்து வரும் இந்த அடிமை வாழ்வில் அடிமையைப் போக்கவும், அறியாமையை நீக்கவும், பாடு படும் ஏடுகளுக்கும், தாழ்வு நிலையில் தமிழைக் கொண்டு சென்று அழித்து விட வேண்டுமென்று எண்ணுவோரின் எண்ணத்தை முறியடித்துத் தனித்தமிழ் எங்கும் பரவச்செய்யத் தொண்டு செய்யும் ஏடுகளுக்கும், நம்மை ஆள வந்தார் அடிக்கடி தொல்லைகளைக் கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள், அவர்களின் தலையீடா ? என்ன என்றே எனக்குப் புரிந்து கொள்ள முடியவில்லை. எனக்கு இதழ் வராத கரணியத்தை — இம்மடல் கண்டதும் தெரியப் படுத்த வேண்டும் என்று தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக விடுதலையை விரும்பும் —மா. அறவாழி, பின்னையூர்.

○ : 1238 : அய்யா பாவலரேறு அவர்கட்கு என் அன்பார்ந்த வணக்கம். நான் எவ்வளவு நெருக்கடியான பணியிருப்பினும் தென்மொழி, தமிழ்ச் சிட்டு, தமிழ்நிலம் என் கையில் கிடைக்கப் பெற்றவுடன் படித்து விட்டுத் தான் ஆக்க நிலையான அடுத்த பணியையோ, பணிக்கான சிந்தனையையோ தொடங்குவேன்.

நான் தமிழ் நிலம் இதழில் கருத்தரங்கை வரவேற்று வாழ்த்துரைத்த நெஞ்சங்கள் என்ற தலைப்பில் பலருடைய எண்ணத்தின் நோக்கங்களை அறிய முற்பட்டு படித்து வருங்கால், 35-வரிசை எண்ணில் இருந்த செய்தி என் மனத்தில் சிறு குழப்பம் மேலிடச்செய்தது. அதில் 'என் உழைப்பு சுரண்டபப்பட்டது'. நான்மேலே வந்து விடாமல் கவனமாகப் பார்த்துக் கொண்டீர். நெய்வேலியில் எடுக்கப்பட்ட முயற்சியை இரண்டொரு நாளிலேயே முறியடித்த பெருமையைத் தேடிக் கொண்டீர்'' என்ற சொற்கள் என் உள்ளத்தைத் தொட்டன. இக் கடிதத்திற்குரியவர் தற்பொழுது மதுரை யாதவர் கல்லூரியின் முதல்வர் முனைவர் மு. தமிழ்க் குடிமகன், க. மு. என்பவரால் எழுதப் பட்டுள்ளது. ஏன் அவ்வாறு அவர் எழுத வேண்டும் ?

அதே இதழில் பக்கம் இரண்டில் தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு செய்திச் சுருக்கம் என்ற தலைப்பில் முதல் பத்தியிலேயே, எக்கட்சியினரும், எம்மதத்தினரும், எச்சாதியினரும், எச்சமயத்தவராயினும் என்ற சொற்கள் இடம் பெற வேண்டிய தேவையில்லை. சாதி மத, இன வேறு பாடுகளை நாம் கருதுதல் கூடாது என்பது கருத்து. அதே நேரத்தில் தமிழினம் என்பது தனித்த இனம் என்றும் அது மற்ற இனத்தவரோடு உறவு கொண்டாடும் உயரிய நோக்குள்ளது என்றும் உலகம் பாராட்ட வேண்டுமே யொழிய நாம் அப்பிரிவை கூறக் கூடாது என்பது இந்த அன்பனின் கருத்து.— அ. மோகன், க.மு, கல்.இ. எடுத்தனூர்.